பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 22 புதன்கிழமை (07.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :285

## வாகரையில் புலிகள் மீது தாக்குதல் 3 போராளிகள் சாவு; ஐவர் காயம்!

மட்டக்களப்பு, செப்.7

மட்டக்களப்பு வாகரையில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் மீது நடத்தப்பட்ட திடீர் தாக்குதலில் மூன்று போராளிகள் உயிரிழந்தனர். மேலும் ஐந்து போராளிகள் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள கட்டுமுறிவுப் பகுதியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அங்குள்ள புலிகளின் காவல் நிலை ஒன்று இராணுவச் சீருடையில் வந்த ஆயுததாரிகளால் தாக்கப்பட்டது என்று புலிகள் தெரிவித்தனர்.

அதேசமயம், இந்தத் தாக்குதல் கருணா குழுவின் முக்கிய நபரான மங்களம் மாஸ்டர் என்பவர் தலைமையில் நடத்தப்பட்டது என்றும் -

அவர்களால் 40 எம்.எம். கிரனேட் லோஞ் சர், ரி-56 ரகத் துப்பாக்கிகள் நான்கு, கிரனேட்டுக்கள் பத்து, கிளைமோர் கண்ணிவெடிகள் இரண்டு, விடுதலைப் புலிகளின் சீருடைத் தொகுதி மூன்று என்பன கைப்பற்றப்பட்டன என்றும் -

இராணுவத் தரப்பினர் செய்தியாளர்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

மூதூரைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சின்னராசா (வினோத்), நிலாவெளியைச் சேர்ந்த பத்மநாதன் செந்தூரன் (சாரங்கன்), கிளிவெட்டியைச் சேர்ந்த நாகரத்தினம் சிவதாசன்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி – தொண்டா நேற்று சந்தித்துப் பேச்சு

கொழும்பு, செப்.7

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்ட மானுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்றுக்காலை நடைபெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இந்தப்பேச்சுவார்த்தையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்தே முக்கியமாக ஆராயப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இரு பிரதான வேட்பாளர்களில் யாரை ஆத ரிப்பதென்று இ.தொ.கா. தலைவர் குழம்பிப் போயிருக்கிறார் எனக் கூறப்படும் நிலையில், அது தொடர்பில் ஜனாதிபதி முக்கிய பல யோசனைகளை அவருக்கு இச்சந்திப்பின்போது தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி தெரிவித்த ஆலோசனைகளை ஆறுமுகன் தொண்டமான் கட்சி முக்கியஸ் தர்களுடன் உடன் ஆராய்ந்தார். (க-3)

# அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து போராளிகளை புலிகள் வாபஸ்பெறுவர்!

## தொடரும் தாக்குதல்களை அடுத்து தீவிர நடவடிக்கை

கொழும்பு, செப்ரெம்பர்7

**அரச - இராணுவக் - கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருக்கும் போராளிகள் அனைவரையும் உடனடியாகத் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு திருப்பி அழைக்கப் புலிகள் தீர்மானித்துள்ளனர். அதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.**

**கிழக்கில் போராளிகள் மீது தொடர்ந்துவரும் தாக்குதல்களை அரசு கட்டுப்படுத்தத் தவறியதை அடுத்தே விடுதலைப் புலிகள் இந்த முடிவை மேற்கொண்டுள்ளனர் என்று தெரியவருகின்றது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணியாற்றும் போராளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை அங்கு தமது செயற்பாடுகளை நிறுத்திக்கொள்வது என்றும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.**

கிழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மீதான தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணைப்படையினருமே இந்தத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடந்த இரு வாரத்தில் மட்டும் மட்டக்களப்பில் போராளிகள் மீது மூன்று தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் ஐந்து போராளிகள் உயிரிழந்தனர். மேலும் அறுவர் காயமடைந்துள்ளனர். அதேசமயத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் பணியில் ஈடுபடும் போராளிகளைக் கடத்திச் செல்வதற்கு இராணுவப் புலனாய்வுத் துறையினரும் துணைப் படையினரும் திட்டமிட்டு வருகின்றனர் என்ற உளவுத் தகவல்களும் புலிகளுக்குக் கிடைத்துள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் அலுவலகம் சுற்றிவளைத்துத் தேடுதல்

மட்டக்களப்பு,செப்.7

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, பாண்டிருப்பில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் நேற்றுப்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### நாவிதன்வெளியில் தாக்குதல்

மட்டக்களப்பு,செப்.7

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன் வெளியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம் மீது நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரும் அவர்களோடு

(18 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையில் கிரனேட் வீச்சு

திருகோணமலை,செப்.7

திருகோணமலை மாவட்டம் அலக்ஸ் தோட்டம் பகுதியில் நேற்றிரவு 7.30 மணியளவில் இனம்தெரியாத நபர்கள் நடத்திய கிரனேட் வீச்சில் இரு இராணுவச் சிப்பாய்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம் சென்று திரும்பிய கப்டன் ஓமந்தையில் கைது!

வவுனியா, செப்.7

போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை விதிகளுக்கு மாறாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி ஊடாகப் பயணம் செய்த இராணுவக் கப்டன் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து நேற்றுமுன்தினம் குறித்த இராணுவக் கப்டன் கைது செய்யப்பட்டார். அவருடன் பயணம் செய்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் தமிழர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் இரதோற்ச

(18 ஆம் பக்கம் பார்க்க)

## 'சுடர் ஒளி' மீது கிரனேட்தாக்குதல்: சந்தேக நபரை கைதுசெய்ய உத்தரவு

கொழும்பு, செப். 7

"சுடர் ஒளி" தலைமை அலுவலகத்தின் மீதுமேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலின் போது மரணமடைந்த பாதுகாப்பு ஊழியர் டேவிட் செல்வரட்ணம், இருதயத்தில் ஏற்பட்ட காயம் காரணமாக மரணமடைந்தார் என கொழும்பு மேலதிக நீதிவான் சுஜீவ நிஸ்ஸங்க நேற்றுத் தீர்ப்பு வழங்கினார்.

கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கை, சாட்சிகளின் விசாரணை அறிக்கை என்பவற்றை ஆராய்ந்த பின்னர் நீதிவான் இந்தத் தீர்ப்பினை வழங்கினார்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்தான விசா

(18 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமயவின் நிபந்தனைகளுக்கும் அடிபணிந்து பிரதமர் அதனுடன் ஒப்பந்தம்

கொழும்பு, செப்.7

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாத்தல், தனி ஓர் இனத்திற்கு சுயநிர்ணய உரிமையை வழங்காதிருத்தல், விடுதலைப் புலிகளை ஆயுதங்களை கீழே வைக்கச்செய்த பின்னர் நிரந்தரத் தீர்வு குறித்து மட்டும் அவர்களுடன் பேச்சுகளை நடத்துதல் என்பன உட்பட ஜாதிக ஹெல உறுமய விதித்த 12 நிபந்தனைகளையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஏற்றுக்கொண்டார். இதனையடுத்து ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதென ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

பிரதமர் ராஜபக்ஷவிற்கும் ஜாதிகஹெல உறுமயவின் தலைவருக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் நேற்றுக்காலை 9.32 மணிக்கிருந்த சுபநேரத்தில் கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை எதிர்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## கிண்ணியா இளைஞர்களின் சடலங்கள் ராகமையில் மீட்பு

### கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில்

கொழும்பு, செப்.7

கிண்ணியாவைச்சேர்ந்த இரு தமிழ் இளைஞர்களின் சடலங்கள், கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் ராகமைப் பகுதியில் வீதியோரம் கிடந்து மீட்கப்பட்டுள்ளன.

கொல்லப்பட்டவர்கள் கிண்ணியா ஆலங்கேணி பகுதியில் வசிக்கும் கிருபன்ராஜ் ருபன்ராஜ் (வயது - 22), முத்துவேல் ஜெகதீபன் (வயது - 29) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேற்படி இரண்டு இளைஞர்களும் ராகமையில் உள்ள பிளாஸ்டிக் தயாரிக்கும் நிறுவனமொன்றில் தொழில்புரிபவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (18 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வழக்கு விசாரணை பற்றி வரம்பு மீறிய விமர்சனங்கள்

# இதய வீணை வானொலி சேவை மீது யாழ்.நீதிமன்றம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ்.நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ள வழக்கு ஒன்று தொடர்பாக விமர்சனம் செய்வதை இதய வீணை வானொலி சேவையினர் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறுமி ஒருத்தி மீதான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருக்கு எதிரான வழக்கு யாழ்.நீதிவான் திருமதி சிறிநிதி நந்தசேகரன் முன்நிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அச்சமயமே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளான அ.விநாயகமூர்த்தி, என்.ரவிராஜ், பொன்.பூலோகசிங்கம் ஆகியோரும்-

பாதிக்கப்பட்ட சிறுமி சார்பில் ஆஜரான சட்டத்தரணி றெமேடிஸும் -

இதய வீணை வானொலி சேவையில் சந்தேக நபர் தொடர்பாக விமர்சனங்கள் ஒலிபரப்புச் செய்யப்படுவதாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

சந்தேக நபர் தொடர்பான விசாரணைகள் இன்னமும் பூர்த்தியடையாத நிலையில், அவர் தொடர்பாக விமர்சனம் செய்வது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல். உடனடியாக இந்த விமர்சனத்தை நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் அந்த வானொலி சேவை நீதிமன்றத்தை அவமதித்ததாக வழக்குத் தாக்கல் செய்ய பொலீஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதிவான் உத்தரவிட்டார்.

சிறுமி மீதான பாலியல் துஷ்பிரயோக வழக்கில் சந்தேகநபரை பிணையில் அனுமதிக்குமாறு கோரித் தாக்கல் செய்த மனு, விசாரணை பூர்த்தியடையாத காரணத்தால் நிராகரிக்கப்பட்டு அவரது விளக்க மறியல் மேலும் இருவாரத்துக்கு நீடிக்கப்பட்டது. (ஐ-3)

# ஜப்பானிய தொண்டு நிறுவனத்தின் யாழ். அலுவலகத்தில் திருட்டு

யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள வெளி நாட்டு தொண்டு நிறுவனமான ஜப்பான் நாட்டின் பசுபிக் ஆசிய மூலவள நிலையத்தின் (PARC) அலுவலகத்தின் கூரைபிரித்து அங்கிருந்து பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. சமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த சில வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் இந்த நிறுவனம், கடற்றொழிலாளர்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கியிருந்தது. அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவிகளை வழங்கி வருகின்றது.

இந்த நிறுவன அலுவலத்தினுள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் அந்த அலுவலகத்தின் மேசை மேல் வைக்கப்படிருந்த டிஜிற்றல் கமரா ஒன்றையும் மேசைலாச்சிக்குள் வைக்கப்பட்டிருந்த காசேலை மற்றும் பணம் என்பனவற்றையும் திருடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் மின்தடை ஏற்பட்டிருந்த சமயம் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இத்திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. இது தொடர்பாக யாழ். பொலீஸ் நிலை யத்தின் குற்றத்தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

நேற்று மாலை யாழ்.பொலீஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு புலனாய்வு பிரதிப் பொறுப்பதிகாரி ரத்நாயக்க தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகள் நடத்தினர். (ஐ-7)

# தமிழீழத்தின் முதன்மை நகரமான யாழ்.நகரை மீண்டும் கட்டி எழுப்ப அனைவரும் முன் வாருங்கள்!

## புதிய ஆணையாளர் அழைப்பு



யாழ்ப்பாணம்,செப்.7

தமிழீழத்தின் முதன்மை நகரமான யாழ்ப்பாணத்தை அனைவரும் ஒன்று சேர்ந்து கட்டியெழுப்ப முன் வாருங்கள்!

இவ்வாறு அழைப்பு விடுக்கிறார் யாழ். மாநகர சபையின் புதிய ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம்.

யாழ்.மாநகர சபையின் ஆணையாளராகப் பதவியேற்றுள்ள சீ.வி.கே.சிவஞானம் நேற்று உதயனுக்கு செவ்வி வழங்கினார். அப்போது இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

1975 முதல் நீண்டகாலம் மாநகர சபையின் ஆணையாளராகப் பணிபுரிந்தவர் சிவஞானம்.

உதயனுக்கு அளித்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பதவியில் மீண்டும் அமர்ந்திருப்பதன் மூலம் உண்மையில் யாழ்.நகருக்கு, மக்களுக்கு சேவை செய்வதற்குரிய வரப்பிரசாதம் எனக்குக் கிடைத்துள்ளது என்று பெருமையடைகிறேன்.

அனைவரும் சேர்ந்து பல எதிர்பார்ப்புகளுடன் என்னை இந்தப் பணியில் அமர்த்தியிருக்கின்றார்கள். எனது பணிகளை அறியவும் மக்கள் காத்திருக்கின்றார்கள். பல தரப்புக்களின் அழுத்தங்களின் காரணமாகவே நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளேன்.

நான் ஏற்கனவே 1975 ஆம் ஆண்டு காலம் தொடக்கம் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை மாநகர சபை ஆணையாளராகக் கடமையாற்றியுள்ளேன். அந்தக் காலப் பகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு அவற்றை செவ்வனே நடைமுறைப் படுத்தியிருக்கின்றேன்.

குறிப்பாக தற்போதுள்ள யாழ்.மத்திய பஸ் நிலையம். அடுத்தது அப்போதைய வாளி மலசல கூடப்பாவனை நடைமுறையை 1984 ஆம் ஆண்டிற்குப் பின்னர் யுனிசெவ் நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் குழி மலசல கூடங்களாக மாற்றி அறிமுகப்படுத்துவதற்கு நான் முயற்சி எடுத்து வெற்றிகண்டேன்.

அந்தக் காலத்தில் வசதியானவர்களின் வீடுகளில் மட்டும் தான் குழி மலசல கூடங்கள் இருந்தன.

வாளி மலசல கூடம் என்றால் இப்போது இருக்கும் புதியவர்களுக்குத் தெரியாது. அது பழையவர்களுக்கு மட்டுமே தெரியும்.

கேள்வி:- யாழ்.நகரத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய திட்டங்கள் ஏதாவது உள்ளனவா?

பதில்:- நகரத்தில் நிறையக் குறைபாடுகள் உள்ளன. இவற்றில் எது முக்கிய பிரச்சினையோ அதை இனங்கண்டு அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவற்றில் சில வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

நடைமுறை ரீதியாக சாத்தியப்படக் கூடியவற்றையே எம்மால் செய்யமுடியும். அதற்கு மேலால் எதுவும் செய்யமுடியாது. நிதிப் பற்றாக்குறை என்பது ஒரு பெரிய பிரச்சினையாகவுள்ளது.

எங்களுடைய நகரத்தில் பல குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அந்தக் குறைபாடுகளை சொல்லிக்கொண்டிருக்காமல் மக்கள் தாங்களாகவே முன்வந்து குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கேள்வி:- நகர மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

பதில்:- தமிழீழத்தின் முதன்மை நகரம் யாழ்ப்பாணம். இலங்கையில் இந்த நகரம் இரண்டாவது இடத்தில் இருந்து. இப்போது பத்தாவது இடத்திற்கு மேல் சென்றுவிட்டது.

யாழ்.மாநகர சபை யாழ்.நகரில் வசிப்பவர்களுக்கு மட்டுமே சொந்தமானது அல்ல. குடாநாடு முழுவதும் வசிக்கும் மக்களுக்கும் அது சொந்தமானது.

சிறந்த சூழல், சுற்றாடல் சுகாதாரத்துடன் சுதந்திரமாக - சுவாத்தியமாக - வாழ்வதற்கு ஏற்றவாறு யாழ்.நகரம் மாற்றப்பட வேண்டும்.

மக்களுக்கு இது தொடர்பான ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும்.

வெளிநாடுகளை முன்மாதிரியாகக் கொண்டு எமது முதன்மை நகரத்தை கட்டியெழுப்ப மக்களாகிய நீங்கள் எல்லோரும் முன் வாருங்கள்.

நாங்கள் எல்லோரும் இணைந்து முதன்மை நகரமாக யாழ்ப்பாணத்தை மாற்றுவோம்.

மாநகர சபை ஆணையாளராகப் பொறுப்பேற்ற நான் சமூகத்தின் பொறுப்புகளை உணர்ந்து எனது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதே எனது ஆசை - என்றார். (ஐ-7)

# பிரபல ஓவியர் இராசரத்தினம் காலமானார்



யாழ்ப்பாணம்,செப்.7

யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற ஓவியர் கணபதி இராசரத்தினம்,நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

கடந்த 29 ஆம் திகதி திங்கட்கிழமை சட்டநாதர் கோயில் பகுதியில் இடம்பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி சைக்கிளில் சென்ற இராசரத்தினம் காயமடைந்திருந்தார். யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த அவர் அங்கு நேற்று உயிரிழந்தார்.

பிரதிமைக் கலை வடிவத்திலான ஓவியத் துறையில் சிறந்து விளங்கியவர் ஓவியர் இராசரத்தினம் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீட சித்திரமும் வடிவமைப்பும் துறை வருகை விரிவுரையாளரும் ஆவார்.

பிரதிமைக் கலைமாமணி, கலாபூஷணம் போன்ற பல பட்டங்களைப் பெற்றுள்ள இராசரத்தினம், ஓவியத்துறை சார்பான இரண்டு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட சித்திர வித்தியாதிகாரியாகவும், வின்சர் ஓவியக் கழக இயக்குநர்களில் ஒருவராகவும் இவர் பணியாற்றியுள்ளார். இவர் நாடகம், எழுத்து விமர்சனம் போன்ற துறைகளிலும் ஈடுபாடு கொண்டு அத்துறைகளிலும் தமது முத்திரையைப் பதித்தவர். (அ-9)

# சமய சந்நிதிகளில்

முழங்காவில்,செப்.7

வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலயம்,கிராஞ்சி கற்பக விநாயகர் ஆலயம், பொன்னாவெளி சித்தி விநாயகர் ஆலயம், ஜெயபுரம் பாலையடிசித்தி விநாயகர் ஆலயம் ஆகியவற்றில் இன்று ஆவணிச் சதுர்த்தி விழா சிறப்புற நடைபெறவுள்ளன.

ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு இந்த ஆலயங்களில் விசேட பூசைகள், வழிபாடுகள், அபிசேகங்கள் என்பன இடம்பெறவுள்ளன. (3-323-203)

* * *

யாழ்ப்பாணம்,செப்.7

சித்தன்கேணி பெரியவளவு மகா கணபதிப் பிள்ளையார் ஆலய நூதன பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டா மகா கும்பாபிசேகம் இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (3-203)

* * *

முழங்காவில்,செப்.7

ஆவணிச் சதுர்த்திதினத்தை முன்னிட்டு இன்று விநாயகர் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

ஜெயபுரம் வரசித்தி விநாயகர் ஆலயம், முழங்காவில் செல்வயோக சித்திவிநாயகர் ஆலயம், பல்லவராயன்கட்டு எரிந்த பிள்ளையார் ஆலயம், பல்லவராயன்கட்டு கற்பக விநாயகர் ஆலயம், பூநகரி செட்டிய குறிச்சி விநாயகர் ஆலயம் ஆகியவற்றிலும் இன்று ஆவணிச் சதுர்த்தி திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது. (3-323-203)

* * *

யாழ்ப்பாணம், செப்.7

அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய விநாயகர் சதுர்த்தி திருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு 108 சங்காபிசேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகும். தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வரபூசை இடம் பெறும்.

மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் சக்திகணபதி பூசையும் நடைபெற்று விநாயகர் பெருமான் வீதியுலாவருவார். (3-203)

* * *

யாழ்ப்பாணம், செப்.7

ஆனைக்கோட்டை உயரப்புலம் புனித அடைக்கலமாதா ஆலயப் பெருந்திருவிழா கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு நற்கருணை வழிபாடும் நற்கருணைப் பவனியும் இடம்பெறும்.

நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து அடைக்கல அன்னையின் தேர்ப்பவனியும், அன்னையின் ஆசீரும் இடம்பெற்று விழா நிறை வடையும். (3-203)

* * *

கொழும்புத்துறை,செப்.7

யாழ். அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா நடைபெற்றுவருகிறது.

இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் பவனியும் இடம் பெறும்.

நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் மாலை திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (3-30-203)

தென்னிந்தியத் திருச்சபைக் குழுவின்

# மேன்முறையீட்டு மனு மீளப் பெறப்பட்டது!

கொழும்பு,செப்.7

தென்னிந்தியத் திருச்சபையின் மட்டக்களப்புப் பிராந்தியக் குருவான வண.ஜெயநேசன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு இணக்கப்பாட்டுடன் மீளப் பெறப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கு ஒன்றில் மூன்றாவது எதிர்மனு தாரரான வண.ஜெயநேசன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

யாழ்.நீதிமன்றம் தனக்கு எதிராக 26.07.2005 பிறப்பித்த பிடியாணையை நிறைவேற்றுவதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கு மாறு அந்த மனுவில் கோரப்பட்டிருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் அன்றூ சோமவன்ஸ, நீதியரசர் எஸ்.விமலச்சந்திர ஆகியோர் முன் இந்தமனு நேற்று முன்தினம் எடுக்கப்பட்டது.

மனுமீது இருதரப்பினரும் தமது வாதங்களை முன்வைத்தனர்.

யாழ்.நீதிமன்றத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறும் விசாரணையில் 3 ஆவது எதிர்மனுதாரரும் மனுதாரருமான வண. ஜெயநேசன் ஆஜராகி எமது குற்றச்சாட்டுக்கு எதிராக பதில் அளிக்க இணக்கப்பாடு நீமன்றத்தில் காணப்பட்டது.

இந்த இணக்கப்பாட்டை ஏற்றுக்கொண்ட வழக்காளி தரப்பினர், பிடியாணையை நிறைவேற்றுமாறுகோரமாட்டோம் என்று நீதிமன்றத்தில் உறுதியளித்தனர்.

3 ஆவது எதிர்மனுதாரர் சார்பில் சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தாபா, சட்டத்தரணி வலியாமுனி ஆகியோரும் -

வழக்காளி சார்பில் சட்டத்தரணி திருமதி என்.வை.குணசீலனின் அனுசரணையுடன் சட்டத்தரணி என்.ஆர்.சிவேந்திரன், சட்டத்தரணி கே.பிரபாகரன் ஆகியோரும் - ஆஜரானார்கள். (ஐ-3)

# ஆங்கிலதின போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.7

வடமராட்சி வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கில தினப்போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் தரம் 8 மாணவர்களுக்கான சொல்வதெழுதல், எழுத்தாக்கம் போன்றனவும் தரம் 9 மாணவர்களுக்கான பார்த்தெழுதுதல் போட்டியும் நடைபெறும் என்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா தெரிவித்துள்ளார். (3-203)

# மாணவர் சீஸன் 10 ஆம் திகதிவரை பெற வசதி

யாழ்ப்பாணம்,செப்.7

பாடசாலை மாணவர்கள் பருவகாலச் சீட்டுக்காளை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம் என வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் க.கணேசபிள்ளை தெரிவித்தார்.

பாடசாலைகள் விடுமுறையின் பின் கடந்த 5 ஆம் திகதி மீளத் திறக்கப்பட்டதால் இந்த வசதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (3)

# அமெரிக்காவில் சூறாவளியின் தாண்டவம்:

# குவியல் குவியல்களாகச் சடலங்கள் மீட்பு! பலியானோரின் எண்ணிக்கை அதிகரிப்பு!!

வாஷிங்ரன்,செப்.7

அமெரிக்காவில் 'கத்தரீனா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட நியூ ஓர்லியன்ஸ் நகரில் இறந்தவர்களின் உடல்களை மீட்கும் பணி வேகமாக நடந்து வருகிறது. இறந்தவர்களின் எண்ணிக்கை பல ஆயிரத்தை தாண்டும் என அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அந்தச் சூறாவளியால் அதிகம் பாதிக்கப் பட்டது நியூ ஓர்லியன்ஸ் நகரமே. சூறாவளி வீசிய ஆறு நாள்களுக்குப் பிறகு தற்போது தான் மீட்புப்பணி தீவிரமாக நடந்து வருகிறது. அந்த அளவுக்கு நிலைமை மோசமாக உள்ளது.

இதுகுறித்து அமெரிக்க சுகாதார அமைச்சர் மிசேல் லியாவிட் கூறுகையில், ''பல ஆயிரம் பேர் இறந்து இருக்கலாம். நியூ ஓர்லியன்ஸ், லூசியானா, பிலாக்சி, மிசிசிபி, அலபாமா என பல பகுதிகளில் சூறாவளியால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. - என்றார்.

நியூ ஓர்லியன்ஸ் நகரில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தவர்களை மீட்கும் பணியிலும் மீட்பு பணியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை 42 ஆயிரம் பேர் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரக்கண்க்கான வீடுகள் தண்ணீரால் சூழப்பட்டுள்ளன. அங்கு யாராவது தவித்து வருகிறார்களா என மீட்புப் பணியினர் 24 மணி நேரமும் தொடர்ந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். சிலர் வீட்டை விட்டு வெளியே வர மறுப்பதால் சிக்கல் உருவாவதாக மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

நியூ ஓர்லியன்ஸ் நகர மேயர் ரே நாகின் கூறுகையில்,'' மீட்புப் பணி மிக கடினமான ஒன்றாக உள்ளது. இப்பணியில் தீயணைப்பு வீரர்கள், பொலீஸார் உட்பட பலர் ஈடுபட்டுள்ளனர். இதில், இரண்டு பேர் கோரத்தை காண சகிக்காமல் தற்கொலை செய்து கொண்டனர். மீட்புப் பணி எவ்வளவு கடினமானது என்பதை இதன் மூலம் உணரலாம். இங்கு பாதிக்கப்பட்ட பாலம் ஒன்றை பொலீஸார் சீர் செய்து கொண்டிருந்தனர். அப்போது ஒரு கும்பல் அவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியது. பொலீஸார் திருப்பிச் சுட்டதில் நான்கு பேர் இறந்தனர். நியூ ஓர்லியன்ஸ் நகரில் சூறாவளி வீசியபோது வெள்ளத்தில் சிக்கி ஏராளமானவர்கள் இறந்தனர். மீட்புக் குழு வரும் என காத்திருந்து பலர் இறந்தனர். சிலர் சோகம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டனர்,''- என்றார்.

(8)



# ஈராக்கில் அமைச்சகம் மீது கடும் தாக்குதல்

பக்தாத்,செப்.7

ஈராக்கில் நேற்றுமுன்தினம் அதிகாலையில் முப்பது தீவிரவாதிகள் 10 கார்களில் வந்து உள்துறை அமைச்சகத்தின் மீது கடும் தாக்குதல் நடத்தினர். இதில் 2 பொலீஸார் பலியாகினர்; ஐந்து பேர் காயமடைந்தனர்.

தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் ரொக்கட் குண்டுகள், சிறு பீரங்கிகள், தானியங்கித் துப்பாக்கிகள் உள்ளிட்ட நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தித் தாக்கினர். இந்த தாக்குதல் இலங்கை நேரப்படி காலை 8.15 மணிக்கு நடந்தது. இதையடுத்து அமெரிக்க ராணுவ ஹெலிகொப்டர்கள் நகரெங்கும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளன. (8)

# சூறாவளியால் பாதிப்புற்ற அமெரிக்காவுக்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் உடன் உதவி

## இலங்கையும் நிவாரண உதவி

வாஷிங்ரன்,செப்.7

புயலால் பாதிக்கப்பட்ட அமெரிக்காவுக்கு இந்தியா, இலங்கை உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட உடனடி நாடுகள் உதவி வழங்கியுள்ளன.

'கத்தரீனா' எனப்படும் பயங்கர சூறாவளிப் புயல் அமெரிக்காவின் 3 மாநிலங்களை நிலைகுலையச் செய்துள்ளது.

லூசியான மாநிலத்திலுள்ள நியூ ஓர்லியன்ஸ் நகரம்தான் பெரியஅளவில் பாதிக்கப்பட்டது. இங்கு ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்; லட்சக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்காக உலக நாடுகள் உதவிகளை வாரி வழங்கி உள்ளன. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகியவை உட்பட 50 நாடுகள் இதுவரை உதவிகளை வழங்கியுள்ளன.

குவைத் 5 ஆயிரம் கோடி ரூபா மதிப்புள்ள பெற்றோலியப் பொருள்களையும் மனிதாபிமான உதவிகளையும் வழங்குவதாக அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பை குவைத் நாட்டின் பெற்றோலிய அமைச்சர் ஷேக் அகமது அல்பாத் அல்சபா வெளியிட்டார்.

இன்னோர் அரபு நாடான கட்டார் ஆயிரம் கோடி ரூபாய் நிவாரண உதவி வழங்குவதாக அறிவித்துள்ளது.

இலங்கையும் உதவி செய்ய முன்வந்துள்ளது. அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களை புயல் பாதித்த பகுதிகளுக்குச் சென்று சேவை செய்யும்படி இலங்கை அரசு கோரியுள்ளது.

பங்களாதேஷ் 5 கோடி ரூபா உதவி வழங்குவதாக அறிவித்துள்ளது.

போர்வைகள், உணவு, தண்ணீர் முதலுதவி மருந்துகள் ஆகியவை தேவை என அமெரிக்க அதிகாரிகள் கேட்டிருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

சர்வதேச சமூகம் அளித்துவரும் உதவிகளுக்கு அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும் பல நாடுகள் உதவிகளை வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளார். (8)



அன்னை திரேஸாவின் நினைவு தினம் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்தியாவின் கொல்கத்தாவில் உள்ள அவரது கல்லறையில் கன்னியாஸ்திரிகள் கூடி அஞ்சலி செலுத்திய காட்சி.

# ஊடுருவல் முடிவுக்கு வந்தால் காஷ்மீரில் படைகள் குறைப்பு

## ஹுரியத் தலைவர்களிடம் இந்தியப் பிரதமர் உறுதி

புதுடில்லி,செப்.7

காஷ்மீரில் மனித உரிமை மீறல்களைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தீவிரவாதிகளின் ஊடுருவல் முடிவுக்கு வந்தால் பாதுகாப்புப் படையினரைக் குறைப்பதற்கான சூழ்நிலை உருவாக்கப்படும் என்றும் ஹுரியத் மாநாட்டு அமைப்பின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார் பிரதமர் மன்மோகன் சிங்.

காஷ்மீரைச் சேர்ந்த மிதவாத ஹுரியத் மாநாட்டு அமைப்பின் பிரதிநிதிகள், அதன் தலைவர் மிர்வாயிஸ் உமர் பாரூக் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இரவு பிரதமரை அவரது இல்லத்தில் சந்தித்தனர். இச்சந்திப்பு இரவு 7 மணிக்குத் தொடங்கி 9.30 மணி வரை நீடித்தது.

கூட்டத்தின் முடிவில் பிரதமரின் ஊடக ஆலோசகர் சஞ்சாய் பாரு இது தொடர்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:


காஷ்மீர் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வு காணப்படவேண்டும் என்பதையும் வன்முறைக்கு இடமில்லை என்பதையும் ஹுரியத் தலைவர்களிடம் பிரதமர் வலியுறுத்தினார்.

காஷ்மீர் மக்கள் அமைதியாகவும் சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழ்வது உறுதிசெய்யப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தடுப்புக் காவலில் கைதுசெய்யப்பட்டோர் தொடர்பான வழக்குகளை மறுஆய்வு செய்ய பிரதமர் ஒப்புக்கொண்டார்.

அதேபோல், காஷ்மீரில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும் என்று பிரதமர் உறுதியளித்தார்.

வன்முறை ஓய்ந்து, தீவிரவாதிகள் ஊடுருவல் முடிவுக்கு வந்தால் காஷ்மீரில் இருந்து பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படும் என்றும் தெரிவித்தார்.



பிரதமருடன் பேச்சு நடத்த கிடைத்த வாய்ப்பை ஹுரியத் தலைவர்கள் வரவேற்றனர். காஷ்மீர் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் கௌரவமான தீர்வு காணப்படவேண்டும் என்பதை அவர்கள் வலியுறுத்தினர் என்றுள்ளது.

(8)

# குவைத் நாட்டில் தாதியர்களை ஏமாற்றிய இந்தியர்கள் கைது!

குவைத் அரச மருத்துவமனைகளில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி இந்திய தாதியர்களிடம் பணம் வாங்கிய ஏராளமான இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து டுபாயில் வெளியாகும் 'அல்-வாடன்' என்ற அரபுப் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:

குவைத் அரச மருத்துவமனைகளில் ஏராளமான இந்தியர்கள் பணி புரிந்து வருகின்றனர். இவர்கள் குவைத்தில் இந்திய தாதியர்களிடம் அரச மருத்துவமனைகளில் வேலை வாங்கி தர பணம் வாங்கியதாகவும், வற்புறுத்திப் பணம் கேட்டதாகவும் தகவல்கள் வெளியானது. மேலும், இது குறித்து குவைத் சுகாதார அமைச்சகத்தின் சட்டப்பிரிவில் ஏராளமான இந்திய தாதிகள் புகார் செய்தனர்.

இந்தியாவை சேர்ந்த தாதியர்களிடம் விசாரணை நடத்த ஒரு குழு உள்ளது. இந்த குழுவைச் சேர்ந்தவர் களே பணம் வாங் கியதாக உறுதியான தகவல்கள் கிடைத்தன. இதையடுத்து இந்த மோசடியில் ஈடுபட்ட பலரைக் குவைத் பொலீஸார் கைதுசெய்தனர். கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- இவ்வாறு அந்த பத்திரிகைச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

(8)




# எகிப்து தீ விபத்தில் 29 பேர் உடல் கருகிப் பலி!

கெய்ரோ,செப்.7

எகிப்து தியேட்டர் ஒன்றில் கடந்த திங்கட்கிழமை இரவு நடந்த தீவிபத்தில் 29 பேர் பலியானார்கள்; 30 இற்கு மேற்பட்டோர் காயமுற்றனர்.

கெய்ரோவிலிருந்து 100 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள நைல் நதிக்கரை அருகில் பெனிசூயப்பில் உள்ள சிறிய தியேட்டர் ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு திடீரென தீப்பிடித்தது. இத்தியேட்டரில் 100 இற்கும் மேற்பட்டோர் அமர்ந்திருந்தனர். திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் 29 பேர் பலியானார்கள்.

தியேட்டரில் வைக்கப்பட்டிருந்த மெழுகுவர்த்தியால் அருகிலிருந்த கம்பளம் ஒன்றில் தீப்பிடித்துப் பின்னர் தியேட்டர் முழுவதும் பரவியதாக காவல் துறையினர் தெரிவித்தனர். (8)

# வேலை இல்லையா?

விருப்பமில்லை? தகுதியில்லை? முயற்சியில்லை?

**SAAMSTECH இன் பயிற்சிநெறிமூலமாக இதுவரை 120 பேர் பணி நியமனம். 60 பேர் பயிற்சியில்.**

ஆங்கில ஆசிரியர்கள், அலுவலர்களுக்கான

## பயிற்சியும் பணிநியமனமும்

**பயிற்சியின் பின்னரான பணிநியமனம்**

- நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள்
- சர்வதேச தொழிநுட்பச்செயற்பாடுகள், இணையதள, மென்பொருள் மற்றும் கற்கைநெறி விருத்தியாக்கத்தில் பணி
- நிறுவன நிர்வாக செயற்பாடுகள்

பயிற்சிக்காலம் : 3 மாதங்கள். தினமும் நான்கு மணிநேரம், வாரத்தில் 5 நாட்கள்

பணி நியமனம் : 05.12.2005

கட்டணம்: ரூபா 12000/-

கல்வித்தகுதி :க.பொ.த உயர் தரத்தில் சித்தி (ஆங்கில பாடத்தில் சித்தி எதிர்பார்க்கப்படவில்லை)

**பல்கலைக்கழக அனுமதியை தவறவிட்டவரா?**

**ஒரு பிரிவில் 40 பேர் மட்டும் பாடநெறியில் சேர்த்துக்கொள்ளப்படுவதால் சுயமாக பூர்த்தி செய்த சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்**

குறிப்பு : அடுத்த பிரிவில் இருந்து பயிற்சிக்காலம் நான்கு மாதமாகவும் கட்டணம் ரூபா 18000/- ஆகவும் அதிகரிக்கப்படவுள்ளது

## SAAMSTECH
**TEACHERS TRAINING COLLEGE**

198 1stfloor, Galle Road,DehiwalaJunction.
841, HOSPITAL ROAD, JAFFNA. PH : 0773068968


## திருத்தப் பணிக்காக மகப்பேற்றுமனை மூடப்பட்டுள்ளது

குருநகர், செப். 7

குருநகர் மவுண்கார்மல் வீதியில் யாழ். பிரதான வீதியில் தண்ணீர்த்தாங்கியின் அருகில் இயங்கி வந்த யூபிலி மகப்பேற்று மனை தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபையின் மேற்பார்வையில் இயங்கிவந்த இம்மகப்பேற்றுமனைக் கட்டடம் சேதமடைந்த நிலையில் உள்ளதனால் திருத்த வேலைகளை ஆரம்பிக்க வசதியாக பாஷையூர் பகுதிக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றது என மாநகரசபையின் வைத்திய அதிகாரி எஸ்.மரியதாஸன் தெரிவித்தார்.

எனினும், கர்ப்பிணித்தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கான சிகிச்சைகள் இங்கு தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆனால், மூடப்பட்டுள்ள இம் மகப்பேற்றுமனையைத் திருத்தி அமைப்பதற்கான எதுவித ஆரம்ப நடவடிக்கை எதுவும் யாழ். மாநகர சபையால் இதுவரை மேற்கொள்ளப்படாமலுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

(9-51)

## முதலாம் வருட நினைவஞ்சலி

அன்னை மடியில் 19 07 1978



இறைவன் அடியில் 19 08 2004

## செல்வன் சுப்பையா தர்மலிங்கம் (தாஸ்)

வானத்தில் ஒளி வீசும் நட்சத்திரங்கள் போல் அண்ணா - நீ
எம் மத்தியில் ஒளி வீசிக் கொண்டிருந்த அண்ணா
உன் முகத்தைத் தேடி அலைகின்றோம் அண்ணா
இளமைக் காலத்தில் நீ வாழ வேண்டிய எவ்வளவோ இருக்க அண்ணா!
உன்னை இரக்கமில்லாத அந்த நயவஞ்சகர்
கூட்டம் உயிரை பறித்து சென்றது ஏனோ அண்ணா
எங்கள் அன்பின் மொத்த உருவமே அண்ணா
நீ எம்மை விட்டுப் பிரிந்து 12 மாதங்களாகி விட்டனவே அண்ணா
எங்களால் இன்னும் நம்பமுடியவில்லை அண்ணா
உன் தங்கை துடிப்பதைப் பாராயோ அண்ணா
அன்புச் செல்லமே எம் இதயங்களையல்லவா
சிலுவையில் அறைந்து விட்டு ஒரு
நொடிப் பொழுதில் மறைந்து விட்டாய் அண்ணா
உன்னைத் தம்பி என்று செல்லமாக அழைத்த அண்ணா துடிப்பதைப் பாராயோ
அண்ணா உன்னை பெற்ற தாய் கதறுவதைப் பாராயோ அண்ணா
நட்புக்காய் அளவெட்டி சென்றாய் அண்ணா
அண்ணா உன் பரந்த மனதிற்காகவா
இறைவன் துடிதுடிக்கப் பறித்துக் கொண்டான்

**அண்ணாவின் உயிர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*சங்குவேலி வடக்கு,*
*மானிப்பாய்.* (39593) (39.16.18)

உங்கள் பிரிவால் வாடும்:
**குடும்பத்தினர்.**


## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல15, சிராம்பையடி வீதி (off Stanly Rd.)
Tele:- 0777 222422, 0773151647

*இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்*

## Computerized Accounting
*AccPac + Quick Books Pro + MYOB*

ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்

**Course Contents**

- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- fore Casting
- Business Planning

80% Off

இக்கற்கைநெறியின் முடிவில் வேலைகொள்வதற்கு

Audit Firm Experience தேவையில்லை!
Working Experience தேவையில்லை!

ஆரம்பம் 10/10/2005 11/10/2005 9.30 AM

**Tally Accounting Package**
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிறது


## ஓராண்டு நினைவலைகள்



மண்ணில் 16.09.1976

விண்ணில் 20.08.2004

## அமரர் பேரம்பலம் கரிகாலன்

*திதி: 07.09.2005*

ஓராண்டு சென்றாலும்
ஓயவில்லை உம் நினைவு
என்றுமே நீங்காமல் எம்
நெஞ்சினில் நீ வாழ்வாய்

மாதகல். (39689) (39.16.18)

தாய், தந்தை, சகோதரர்கள், மனைவி, பிள்ளைகள்.


**அனைவருக்கும் புலமைப்பரிசில்**

## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**

# புலமைப்பரிசில் திட்டம் - 2005

80% OFF

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 6மாதம் | 8,000 | 1,600 |
| Diploma in WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| MS Office | - 3 மாதம் | | 500 |

50% OFF

## Advances Courses

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma in Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கிகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

September 30th திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I - 18/09/2005
Batch II - 23/09/2005
Batch III - 25/09/2005
Batch IV - 02/10/2005

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-2228250, 0777 222422


## ஒன்பதாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 - 03 - 1978



உதிர்வு 15 - 09 - 1996

## சந்திரசேகரம் சந்திரகாந்தன்

(மாணவன், மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை)

திதி: சதுர்த்தி

பாசமுள்ள எங்கள் அன்புச் செல்வமே!
ஆண்டுகள் ஒன்பது மறைந்தாலும்
ஆறாது எம்துயரம் .

*உமது ஆத்மா சாந்தியடைய விநாயகரை என்றும் பிரார்த்திக்கின்றோம்.*

பன்னாலை,
தெல்லிப்பழை. (39653)(39.16.18)

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## புலிகளின் விருப்பை நிறைவு செய்ய தயாராகும் தென்னிலங்கைத் தலைமை

சுயநிர்ணயத்துக்கான தமிழரின் அரசியல் போராட்டம் ஐந்தரை தசாப்தங்களுக்கு மேலான நீண்ட வரலாற்றுப் போக்கைக் கொண்டது. சிங்களப் பேரினவாத அரச ஒடுக்குமுறையின் வரலாற்றுப் பெறுபேறாகப் பிறப்பெடுத்த தமிழ்த் தேசியமானது தமிழர்களை ஒன்றுபட்ட மக்களாக - ஒரே தேசமாக - எழுச்சிகொள்ளச் செய்துள்ளது. தேச விடுதலைக்காக வீறுகொண்டு எழுந்து நிற்கும் தமிழினத்தின் - தமிழ்த் தேசியத்தின் - வலிமை மிக்க முதிர்ச்சி நிலையைத் தென்னிலங்கைச் சிங்கள அரசியல் தலைமைகள் இன்னும் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் விசனத்துக்குரியது.

அடுத்த பத்து வாரகாலத்துக்குள் நடைபெறவிருக்கும் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஆளும் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடப்போகும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தாம் இணக்கம் கண்ட விடயங்கள் எனத் தெரிவித்து ஜே.வி.பியினர் வெளியிட்டிருக்கும் பன்னிரண்டு அம்சங்கள் அடங்கிய ஆவணம், தமிழ்த் தேசியத்தின் எழுச்சியையும் வளர்ச்சியையும் வலுவையும் அதன் நிலைப்பாட்டையும் தென்னிலங்கை இன்னும் புரிந்துகொள்ளக்கூட முயற்சிக்கவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துகின்றது.

தற்போதைய யுத்தநிறுத்தமும் அமைதிப் பேச்சுகளுக்கு இடமளிக்கக்கூடிய வாய்ப்பான சூழலும் பல்வேறு படிநிலைகளைத் தாண்டியபின்னரே கூடி வந்திருக்கின்றன; கிட்டியிருக்கின்றன. அவற்றையெல்லாம் மறந்துவிட்டு - அல்லது மூடிமறைத்துவிட்டு - ஆரம்பத்திலிருந்து பிள்ளையார் சுழிபோட்டு விடயத்தை ஆரம்பிக்க நினைக்கிறார் போலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

இந்தப் பன்னிரண்டு அம்சத் திட்டங்களில் அமைந்துள்ள விடயங்களைப் பார்த்தால் கடந்த கால மோசமான பட்டறிவை, மீண்டும் ஒரு தடவை பட்டுத் தெளிந்த பின்னர் தான் தேறுவார்கள் போலும் சிங்களத் தலைவர்கள் என்று தோன்றுகிறது.

ஜே.வி.பி. குறிப்பிடும் இந்த விடயங்களுக்குப் பிரதமர் மஹிந்த உண்மையில் இணங்கியிருப்பாரேயானால் -

கடந்த மூன்றரை வருட கால அமைதி முயற்சிகள் - சமாதான எத்தனங்கள் - அனைத்துமே விழலுக்கு இறைத்த நீர் என்ற நிலைமைதான்.

அது மட்டுமல்ல, இனிமேல் அமைதிவழித் தீர்வுக்கு வாய்ப்பே இல்லை என்பதும் சிங்களத் தலைமையால் உறுதிப்படுத்தப்பட்டதாகவே கருதவேண்டிவரும்.

இந்தப் பன்னிரண்டு அம்சங்களில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கான பொதுக்கட்டமைப்பு கைவிடப்படும் என்ற விவகாரம் தற்போதைய அன்றாடப் பிரச்சினையோடு சம்பந்தப்பட்டது; அவசர - அவசிய - மனிதாபிமானத் தேவைகளுடன் தொடர்புபட்டது.

அது தவிர்ந்த ஏனைய சில விடயங்கள் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - பேச்சு வாயிலாக- இணக்கத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான அடிப்படைகளோடு நேரடியாகச் சம்பந்தப்பட்டவை. சுருக்கமாகக் கூறினால், அந்த அடிப்படைகளோடு முற்று முழுதாக முரண்பட்டு நிற்பவை.

* இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சே இனிமேல் இல்லை.
* இறுதித்தீர்வு குறித்து மட்டுமே இனிமேல் பேசலாம்.
* இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி அடிப்படையில் மட்டுமே தீர்வு.
* புலிகளுடன் மட்டுமல்ல எல்லா அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களுடனும் பேச்சு. (அதாவது தமிழர் தரப்பில் ஏகபிரதிநிதிகள் என்ற அந்தஸ்து விடுதலைப் புலிகளுக்கு இனிமேல் வழங்கப்படமாட்டாது.)

- இந்த அம்சங்கள் தவிரவும், தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மாற்றியமைத்தல், நோர்வேயின் அனுசரணைப் பங்களிப்புக் குறித்து மீள்பரிசீலனை செய்தல் போன்றவற்றுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இணங்கியிருக்கின்றார் என்கிறது ஜே.வி.பி.

இதுதான் பிரதமரின் நிலை என்றால் அவர், அமைதி முயற்சிகளுக்கான வாய்ப்பை அடியோடு குழிதோண்டிப் புதைத்துவிட்டார் என்று அர்த்தம். சமாதான எத்தனங்களை நாசப்படுத்தி, போர் முரசு அறையத் தயாராகிவிட்டார் என்று பொருள். வலுமிக்க அரசியல், போரியல் சக்தியாக வளர்ந்துள்ள ஈழத் தமிழர்களின் பிரதிநிதித்துவ அமைப்பான விடுதலைப் புலிகள் இயக்கம் குறித்து ஆகக்குறைவாக அவர் மதிப்பிடுகின்றார் என்று கருத்து.

தேச விடுதலைக்காக உயிரையும், உதிரத்தையும் தற்கொடையாக வழங்கி, உணர்வோடும் உத்வேகத்தோடும், திடசங்கற்பத்துடனும், பற்றுறுதியுடனும் போராடி வரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சர்வதேச அழுத்தத்துடன் கூடிய சமாதான முயற்சிகள் கட்டிப்போட்டிருக்கின்றன; அடக்கிவைத்திருக்கின்றன என்பது இலங்கை விவகாரத்தை நோக்கும் ஒவ்வொருவருக்கும் புரியக்கூடியதாகும்.

அந்தச் சமாதான முயற்சிகளுக்கு ஆப்பு வைப்பதற்கான அடிப்படைகளுக்கு இணங்குவதன் மூலம் தமிழர் தேசத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு சர்வதேச ரீதியில் நியாயம் கற்பித்து, அதனை முழுமூச்சுடன் தமிழர்கள் முன்னெடுப்பதற்கான வாய்ப்பை,ஜே.வி.பியுடன் இந்தப் பன்னிரு அம்சங்களுடன் கூடிய இணக்க ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதன் மூலம், திறந்துவிடுகிறார் பிரதமர்.

இந்தப் பன்னிரு அம்சத் திட்டத்திற்குத் தாம் இணங்கியிருக்கிறாரா என்பதைப் பிரதமர் மஹிந்த முதலில் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தவேண்டும்.

அப்படி அவர் வெளிப்படுத்தி, அந்தத் திட்டத்தோடு செயற்படுவதற்கு முன்வரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை இலங்கை தனது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்குமானால், தமிழர் தேசத்தின் விடுதலைப் போராட்டம் தவிர்க்கமுடியாதது என்பது நியாயப்படுத்தப்படும்.

ஈழத் தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான அபிலாசைகளை நிறைவுசெய்யும் நியாயத் தீர்வு ஒன்றைத் தென்னிலங்கைச் சிங்களத் தலைமை வழங்குவதற்கு முன்வரவேமாட்டாது என்று காலங்காலமாகத் தமிழர்கள் கூறிவருவது மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தப்பட்டதாகும்.

தமது இறுதி இலட்சியத்தை அடைவதற்கு வாய்ப்பாக எது நடக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கின்றார்களோ அதுவே நடப்பதாகியும் விடும்.

## மாநகரசபை தீயணைப்புப் பிரிவில் வாகனங்கள், ஆளணிப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவிற்குத் தீயணைப்பு வாகனங்கள் மற்றும் ஆளணி என்பன பற்றாக்குறையாக இருப்பதாக தீயணைப்புப் பிரிவின் அதிகாரி சி.ஆனந்தராஜா தெரிவித்தார்.

தீயணைப்புப் பிரிவில் உள்ள தீயணைப்பு வாகனம் 1985 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டது தற்போது அதனது பாவனைக்காலம் முடிவடைந்து செல்கிறது. இந்த வாகனத்தைப் பழுது பார்ப்பதற்குரிய உதிரிப்பாகங்கள் அரிதாக உள்ளன.

நுணுக்கமான இயந்திரத் திருத்துநர்கள் இல்லை. ஆளணிப் பற்றாக்குறையும் நிலவுகிறது. இதனால், தீயணைப்புச் சேவையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாதுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போது யாழ்.மாவட்டத்தில் யாழ். மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவு மட்டுமே இயங்கி வருகிறது. அங்கு பணியாற்றும் நிரந்தர தீயணைப்பு வீரர்களையும் ஒரு தீயணைப்பு வாகனத்தையும் கொண்டு ஒரே நேரத்தில் பல இடங்களில் இடம்பெறுகின்ற தீ விபத்துச் சம்பவங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-ரி)

## காக்கைதீவு வெள்ளவாய்க்கால் ரூ.35 வட்சம் செலவில் புனரமைப்பு

முப்பதைந்து லட்சம் ரூபா செலவில் காக்கைதீவில் வெள்ளவாய்க்கால் அணைச் சுவர் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

புனரமைப்புக்கான நிதியுதவியினை யாழ். சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்க முன்வந்துள்ளது.

பெரும்போக மழைகாலங்களில் காக்கைத்தீவு வெள்ளவாய்கால் ஊடாக நீர் வழிந்து போகமுடியாது அப்பகுதிக் குடிமனைகளில் தேங்கி நிற்கின்றது. இதனால், அப்பகுதி மக்கள் இடம்பெயரவும் நேரிடுகிறது.

இதனையடுத்து, காக்கைதீவில் வெள்ள வாய்க்கால் அணைச்சுவர் கட்டுமானப் பணிகள் விரைவில் இடம் பெறவுள்ளன.

மேற்படி வெள்ளவாய்க்கால் புனரமைப்புக்கான தொழில்நுட்ப மதிப்பீட்டை வலி.தென்மேற்குப் பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதியிடம் வழங்கியுள்ளார்.

புனரமைப்புப் பணிகள் அப்பகுதி கிராம அலுவலர் வை.சந்திரராஜ் தலைமையில் மக்கள் பங்களிப்புடன் நிறைவேற்றப்படவுள்ளன. (9-185)

## கருத்தமர்வில் பேரா.சிவத்தம்பி

யாழ்ப்பாணம்,செப்.7

சேது காண்மியப் பண்பாட்டிற்கான கற்கைப்புலம் ஒழுங்குசெய்துள்ள 'சினிமாவும் தமிழ் பண்பாடும்' என்ற தலைப்பிலான கருத்தமர்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தமர்வில் பேராசிரியர் கா.சிவத்தம்பி கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளார். (9)

## பின்தங்கிய இரண்டு கிராமங்களில் 50 மலசலகூடங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.7

சிறுவர் பாதுகாப்பு நிதிய நிதிப்பங்களிப்புடன் இரண்டு பின்தங்கிய கிராமங்களில் 50 மலசலகூடங்கள் புனரமைத் துக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாட்டை சிறுவர் பாதுகாப்பு நிதிய பதில் அபிவிருத்தி முகாமையாளர் கே.மகேந்திரன் மேற்கொண்டுள்ளார்.

ஜே/133 ஆனைக்கோட்டை கிராம அலுவலர் பிரிவில் 41 மலசலகூடங்களும் ஜே/96 அரியாலை மத்தி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் 9 மலசலகூடங்களும் விரைவில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர், நல்லூர் பிரதேச செயலர் ஆகியோர் இதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச சபைகளுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

மலசலகூடம் அமைப்பதற்கான 50 குடும்பங்கள் ஆய்வு மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (9-185)

## சுழிபுரம் கடற்றொழிலாளர் 25 பேருக்கு ரூ.ஒரு கோடி பெறுமதியான உபகரணங்கள்

வட்டுக்கோட்டை,செப்.7

யுத்தம் மற்றும் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் ஒரு கோடி ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு அண்மையில் சுழிபுரம் ஐயனார் ஆலய முன்றிலில் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.குலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இருபத்தைந்து கடற்றொழிலாளர்களுக்கு முழுமையான உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், சுழிபுரம் கடற்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் மணாளன், ஐக்கிய அபிவிருத்தி நிறுவன இலங்கைப் பணிப்பாளர் செல்வி கத்தலின், நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் யூட் சிமியோன், கடல்வள நீரியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ரி.தர்மலிங்கம் வடமாகாண கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான இயந்திரப் படகு, வலைகள் என்பன அடங்கிய கடற்றொழில் உபகரணங்கள் வலி. மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ் மற்றும் ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் பிரதிநிதிகள் ஆகியோரால் கையளிக்கப்பட்டன. (9-161)

## தொண்டர் ஆசிரியர்களும் அதிபர்களும் இவ்வருட இறுதிக்குள் நிரந்தரமாவர்

காரைதீவு,செப்.7

இவ்வருட முடிவிற்குள் வடக்கு -கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் பதில் அதிபர்களும் தொண்டராசிரியர்களும் நிரந்தரமாக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கல்வியமைச்சின் உயரதிகாரியொருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள பதில் அதிபர்கள் அவர்களின் பாடசாலைகளின் தன்மையையும் அவர்களது தகைமையையும் பொறுத்து இலங்கை அதிபர் சேவை வகுப்பினுள் நிரந்தரமாக உள்சேர்க்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விரைவில் அவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறுமெனவும் கூறப்பட்டது.

இதேவேளை -

வடக்கு -கிழக்கில் கடமையாற்றும் சகல தொண்டராசிரியர்களையும் நேர்முகப் பரீட்சையில் தோற்றச் செய்ய வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கஷ்ட, அதிகஷ்டப் பிரதேச தொண்டராசிரியர்களின் நேர்முகப் பரீட்சையும் தொடர்ந்து நடைபெறும். (9-84)

### நாளை

ஆவணி 23
வியாழக்கிழமை
08.09.2005
திதி: பஞ்சமி
பிற்பகல் 04.02வரை
நட்சத்திரம்: சுவாதி
பின்னிரவு 12.24வரை
சுபநேரம்: 07.34 - 09.04
ராகுகாலம்: 01.34- 03.04
(யாவும் பழைய நேரப்படி)

பரு/ 5808 திருமதி. சரஸ்வதி கதிரவேற்பிள்ளை
பரு/ 5819 திரு. சூசைமுத்து ஜோசேப்பு
பரு/ 5824 திரு. முருகுப்பிள்ளை இராமஜெயம்
பரு/ 5832 திரு. சபாபதிப்பிள்ளை செல்வராசா
பரு/ 5834 திருமதி. சிவக்கொழுந்து சிவப்பிரகாசம்
பரு/ 5839 திருமதி. லட்சுமிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை
பரு/ 5841 திருமதி. பார்வதிப்பிள்ளை இரத்தினசபாபதி
பரு/ 5845 திரு. வல்லி பன்னிருகரம்
பரு/ 5861 திரு. ஆறுமுகம் முருகேசு
பரு/ 5876 திருமதி. தங்கம்மா கந்தசாமி
பரு/ 5877 திருமதி. லூர்த்தம்மா ஞானப்பிரகாசம்
பரு/ 5879 திரு. இராஜசேகரம் திருநாவுக்கரசுநாயனார்
பரு/ 5887 திருமதி. சற்குணபூபதி செல்வநாயகம்
பரு/ 5889 திருமதி. சரஸ்வதி சுரேந்திரநாதன்
பரு/ 5895 திருமதி. பார்வதிப்பிள்ளை வைரவிப்பிள்ளை
பரு/ 5900 திரு. நாகப்பர் கிருஸ்ணபிள்ளை
பரு/ 5935 திருமதி. சாவித்திரிதேவி அருணாசலம்துரை
பரு/ 5939 திருமதி. பரிபூரணம் ஆனந்தராசா
பரு/ 5944 திருமதி. பாக்கியம் ஜெனதாசன்
பரு/ 5973 திருமதி. தையல்நாயகி சச்சிதானந்தன்
பரு/ 5986 திருமதி. அமிர்தநாயகி கிருஷ்ணசாமி
பரு/ 5996 திரு. சண்முகம் கந்தசாமி
பரு/ 6018 திரு. அருணாசலம் திருநாவுக்கரசு
பரு/ 6023 திருமதி. அன்னலட்சுமி நவரத்தினசிங்கம்
பரு/ 6030 திரு. இராசரத்தினம் இராசசிங்கம்
பரு/ 6033 திரு. ஆழ்வாப்பிள்ளை குஞ்சர்
பரு/ 6042 திரு. சின்னத்தம்பி இராசரத்தினம்
பரு/ 6043 திருமதி. சின்னமனி இரத்தினம்
பரு/ 6068 திரு. கணபதிப்பிள்ளை செல்லையா
பரு/ 6077 திருமதி. சிவக்கொழுந்து கந்தையா
பரு/ 6092 திரு. மகாலிங்கம் சங்கரகாந்திலிங்கம்
பரு/ 6103 திரு. தருமரத்தினம் பொன்னம்பலம்
பரு/ 6108 திருமதி. மகேஸ்வரி விநாயகமூர்த்தி
பரு/ 6122 திரு. மூத்ததம்பி சுப்பிரமணியம்
பரு/ 6148 திரு. வீரகத்திபிள்ளை கனகசபை
பரு/ 6160 திரு. இளையதம்பி முத்துராசா
பரு/ 6174 திருமதி. தெய்வநாயகி கதிரவேற்பிள்ளை
பரு/ 6181 திரு. துரைச்சாமி மகேந்திரம்
பரு/ 6182 திருமதி. குணேஸ்வரி சிவகாமிஆண்டார்
பரு/ 6188 திருமதி. சரஸ்வதி பொன்னையா
பரு/ 6201 திரு. சிவகுருநாதர் குமாரசாமி
பரு/ 6212 திரு. நாகலிங்கம் குணரட்ணம்
பரு/ 6239 திரு. இளையதம்பி கதிரவேலு
பரு/ 6264 திருமதி. இலட்சுமி சின்னப்பொடியன்
பரு/ 6274 திரு. வைத்திலிங்கம் திருநாவுக்கரசு
பரு/ 6275 திரு. முத்தையா பாலகிருஸ்ணன்
பரு/ 6326 திருமதி. சரஸ்வதி ஆழ்வாப்பிள்ளை
பரு/ 6327 திரு. சின்னத்தம்பி வேலாயுதம்
பரு/ 6338 திருமதி. வள்ளிமுத்து தம்பையா
பரு/ 6341 திருமதி. தவமணி இரட்ணம்
பரு/ 6368 திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
பரு/ 6371 திரு. துரையப்பா கோவிந்தசாமி
பரு/ 6373 திருமதி. சின்னம்மா கணபதி
பரு/ 6394 திரு. செந்திவேல்பிள்ளை இராசலிங்கம்
பரு/ 6396 திரு. சின்னான் நடேசன்
பரு/ 6442 திருமதி. தங்கமுத்து பஞ்சவர்ணம்
பரு/ 6447 திருமதி. இலட்சுமி தேவசகாயம்
பரு/ 6479 திருமதி. மங்கையர்க்கரசி கிட்ணபிள்ளை
பரு/ 6499 திரு. கந்தையா ஆறுமுகம்
பரு/ 6515 திருமதி. மங்கயற்கரசி கந்தவனம்
பரு/ 6546 திரு. முருகேசு வடிவேலு
பரு/ 6554 திரு. வைத்திலிங்கஐயர் கிருஷ்ணசாமிஐயர்
பரு/ 6565 திருமதி. அரசம்மா சரவணபவான்
பரு/ 6575 திருமதி. மீனாட்சி சின்னத்தம்பி

(வளரும்)



# சித்தன்கேணி-பெரியவளவு
## மஹா கணபதிப்பிள்ளையார் கோயில் நூதன, பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டா
## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் 07-09-2005

### ஆசிச் செய்தி

*திருவாக்கும் செய்கருமம் கைகூடும் - செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும்*
*உருவாக்கும் ஆதலால் வானோரும்*
*ஆனை முகத்தானை காதலால் கூப்புவர் தம் கை*



சகல வளங்களும் நிறைந்து விளங்கும் ஈழத் திருநாட்டிலே வடபால் சித்தர்கள் வாழ்ந்த சித்தன்கேணியில் பெரியவளவுப் பதியில் கோயில் கொண்டு அடியார்களின் வினை தீர்க்கும் ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையாரின் ராஜமூர்த்தமாகிய பஞ்சமுக மூர்த்தியின் கும்பாபிஷேகத்தினாலே இந்தக் கிராமத்திற்கும் நாட்டிற்கும் சகல ஜீவராசிகளிற்கும் சுபீட்சமான வாழ்வும் சகல செல்வங்களும் பெற்றுச் சிறப்புடன் வாழ வேண்டுமென்று பிரார்த்தித்து. இந்தக் கும்பாபிஷேகத்திற்காக அரும்பாடுபட்ட உபயகாரர்கள், நிர்வாக சபையினர் மற்றும் அடியார்களுக்கும் ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையாரின் திருவருள் துணைநிற்க எம்பெருமானின் ஐந்து திருமுகங்களில் இருந்தும் பஞ்ச பூதங்களினுடைய அனுகூலமான பலன்களும் நிறையக் கிடைக்கப்பெற்று இந்தக் கும்பாபிஷேகமானது சிறப்பாக நடைபெற எல்லாம்வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளைக் கூறி அமைகிறேன்.

*இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.*
**இறை பணியுள் சிவாச்சார்ய சிரோன்மணி**
**சிவஸ்ரீ ச.லம்போதரகுமாரசாமிக் குருக்கள்**





"சிற்ப கலா ஞானபானு"
"கலா ரெத்னா"
"சிற்ப கலா வேந்தன்"
ஸ்தபதி சு.பாஸ்கரன்
479, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021- 222-3515.

### சண்முகராஜக்குருக்களின் ஆசிச்செய்தி



சித்தன்கேணி பெரியவளவில் கோயில் கொண்டுள்ள மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் நூதன பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை நடைபெறுகின்ற நன்னாளில் சித்தன்கேணி விநாயக அடியார்கள் தங்களின் மனதில் நின்று உறைகின்ற இறைவன் அடியவர்கள் மீது கொண்ட பெரும் கருணையினால் இவ்வாலயத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் போன்ற சிறப்புடன் திகழ்கின்றான். இந்த ஆலயத்தில் நித்தியபூசைகள் நடைபெறுகின்றமை மிகவும் சிறப்பான அம்சமாக பஞ்சமுக விநாயகப் பெருமான் நைமித்திய பூசையின் போது அதாவது மகோற்சவத்தில் இரத உற்சவம் நடைபெறும்போது பஞ்சமுகப் பெருமானின் திருவருட்கடாட்சம் எல்லா மக்களுக்கும் கிடைக்க ஆலயத்தில் நிறைவாக அமையப் பெற்றுள்ளது. மகா கணபதிப் பிள்ளையாரின் சிறப்பும் பஞ்சமுக விநாயகரின் சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்ற சித்தன்கேணி வாழ் அடியார் செய்வித்த தர்மசீலர் மிக கொண்ட அரும்பெருங் கருணையால் திரிகரண சுத்தியோடு வழிபடும் பக்தியுணர்வோடும் சைவமும் தமிழும் என்றும் நிலைத்து ஆன்மீகங்கள் சிறக்க இதுபோன்ற சிவப்பணிகள் மிக மிக அவசியம். ஆவணிச் சதுர்த்தி நன்னாளில் பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டை நடைபெறுவதையிட்டு இதைச் செய்வித்த தர்மசீலர்களுக்கும், எல்லோருக்கும் எல்லாம் வல்ல பஞ்சமுக,விநாயகரின் திருவருட்பேறு கிடைக்க ஆசி கூறி அமைகிறேன்.

*சர்வே ஜனாகா சுகினோ பவந்து*
வேதசிவாகம வித்தியா பூசணம்
சிவஸ்ரீ ப.சண்முகராஜக்குருக்கள்
பலாணை கண்ணகை அம்மன் தேவஸ்தானம், கோப்பாய்.

### பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



இலங்கைத் தீவின் சிரம்போல அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குப் பக்கமாக அமைந்துள்ள சித்தர்கள் வாழ்ந்த ஊராகிய சித்தன்கேணியில் நாற்சந்தியோடு அமைந்துள்ளது பெரியவளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில். இக்கோயிலில் வீற்றிருந்து அடியார்கள் எல்லோருக்கும் அருள்பாலித்து வரும் விநாயகப் பெருமானைப் பஞ்சமுக விநாயகப் பெருமானாகக் காணும் பேரவாவினால் உந்தப்பெற்று ஐம்பொன்னினாலான பஞ்சமுக விநாயகர் விக்கிரகம் அமைக்கப் பெற்றுள்ளது.

இந்த ஐம்பொன் விக்கிரகத்தை சிற்பச் சரியார் சு.பாஸ்கரன் அவர்கள் வடிவமைத்து உருவாக்கியுள்ளார். 05-09-2005 முதல் கிரியைகள் நடைபெற்று 07-09-2005 காலை 6.30 மணிமுதல் 8.30 மணிவரையுள்ள அருள்முகூர்த்தத்தில் இந்தப் பஞ்சமுக விநாயகர் விக்கிரகம் கும்பாபிஷேகம் இடம்பெற்று பிரதிஷ்டை செய்யப்படுகிறது.

இக்கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ ப.சண்முகராஜக்குருக்கள் அவர்கள் பிரதிஷ்டா குருவாக இருந்து விநாயகப் பெருமானின் அருள்பெற்று சிறப்பாக நடத்திவைக்கிறார். ஆலயகுருவாகிய பிரம்மஸ்ரீ நா.கமலநாதசர்மா அவர்களும் ஏனைய சிவாச்சாரியார்களும் அவருக்கு உதவியாக இருந்து கருமம் ஆற்றுகிறார்கள். இவ்விழா சிறப்பாக நடைபெற்று எங்கள் எல்லோருக்கும் எல்லாம்வல்ல ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையாரின் அருள் என்றென்றும் கிடைக்கவேண்டும் என எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**மு.பத்மநாதன்** தலைவர், பரிபாலன சபை.



### நித்திய ஆலயக் குருவின் ஆசிச் செய்தி

**கஜானனம் பூதகணாதி ஸேவிதம்**
**கபித்த ஜம்பு பலஸார புஸிதம்**
**உமாசுதம் சோகவிநாச காரணம்**
**நமாமி விக்னேஸ்வர பாதபங்கஜம்**

அருள்மிகு சித்தன்கேணி பெரிய வளவு மகா கணபதிப் பிள்ளையார் கோயில் நூதன பஞ்சமுக விநாயகர் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் ஆவணி 22 ஆம் நாள் இன்று 07.09.2005ஆம் திகதி 6.30-8.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறுவதையிட்டு நான் அளவற்ற மகிழ்ச்சி அடைவதுடன், எமது ஆலயத்தில் பஞ்சமுக விநாயகர் தேவை என்ற அடியார்களின் ஆவல் நிறைவுறுகிறது. இவ்வுபயத்தை மனமுவந்து செய்வித்துத் தந்த உபயகாரர் குடும்பத்தினருக்கும் குறுகிய காலத்தில் ஆகம ஒழுங்கும், அழகும் கூடிய கலை அம்சத்துடன் உருவமைத்துத்தந்த சிற்பாச்சாரியார் திரு.சு.பாஸ்கரன் அவர்களுக்கும் பரிபாலன சபைக்கும் தொண்டர் சபைக்கும் இக்கிராம மக்களுக்கும் எமது நாட்டு மக்களுக்கும் எல்லாம்வல்ல ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையாரின் திருவருளினால் சகல சிறப்புக்களும் கிடைக்கப்பெறப் பிரார்த்தித்து வாழ்க என வாழ்த்தி எனது நல்லாசியைக் கூறுகின்றேன்.

ஆலய குரு பிரம்மஸ்ரீ நா.கமலநாதசர்மா


### விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

| | | | | |
|---|---|---|---|---|
| **SUNDHARSON**<br>IMPORTERS & DISTRIBUTORS OF ELECTRICAL ITEMS & ELECTRIC & KEROSINE WATER PUMPS, FLOOR & WATER TITLES.<br>CENTRAL MARKET VIEW, MANIPAY<br>PHONE 021 -222 2751, FAX: 021-222 2751. | **மகாலக்ஷ்மி பல்பொருள் வாணிபம்**<br>கட்டடப் பொருள்கள் விற்பனையாளரும் ரான்ஸ்போட் சேவிஸ்<br>மடத்துப் பிள்ளையார் கோயிலடி, தொல்புரம். | **MARBLAS**<br>TERRAZZO MARBLE & GRANITES THOL PURAM<br>தொ.பே.021-222-2328 (OFFICE)<br>021-222-6729. | **சித்தன்கேணி முச்சக்கர வண்டி உரிமையாளர்கள்**<br>குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை<br>சித்தன்கேணி. | ஆங்கில மருந்து விற்பனையில் நீண்டகால முன்னோடிகள்<br>**அபி மெடிக்கல்**<br>மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. |
| **வளர்பிறை பட்டுச்சோலை**<br>பட்டுப் புடைவையகம், சாம்ராஜ்யம்<br>பிரதான வீதி, சங்கானை. | அனைத்து வகையான மருந்து வகைகளையும் பால்மா வகைகளையும் ஓரிடமாகப் பெற்றிட நாடுங்கள்<br>**சங்கானை பாமசி**<br>பிரதான வீதி, சங்கானை. | **கந்தசாமி அன்சன் பல்பொருள் வாணிபம்**<br>பிரதான வீதி, சங்கானை. | தலைசிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டல்.<br>**பாரதி கல்வி நிலையம்**<br>பிரதான வீதி, சித்தன்கேணி. | **விநாயகர் தொலைத் தொடர்பகம்**<br>பிரதான வீதி, சித்தன்கேணி.<br>தொ.பே.021-222-5822, 060 2212757. |
| **RUPA VERSATILE TRADES**<br>NO.104, STANLEY ROAD, JAFFNA. TEL: 2479. | **இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**<br>50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.<br>தொ.பே.021- 222-2988, பக்ஸ்: 021- 222-2368. | **மகாராசி சில்க்ஸ்**<br>59, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.<br>தொ.பே.0777-286247. | **புனிதா நகை மாடம்**<br>169, 171, மின்சார நிலைய வீதி (யாழ். பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.<br>தொ.பே.021- 222 7629. | **குமரன் இரும்பகம்**<br>வடழக்கம்பரை வீதி, பண்ணாகம், சுழிபுரம். |
| **லட்சுமி ஸ்ரோஸ்**<br>பல்பொருள் வாணிபம்<br>பிரதான வீதி, சங்கானை. | **அனுஷன் வீடியோ சென்ரர்**<br>கீரிமலை வீதி, சித்தன்கேணி. | வலிகாமம் மேற்கின் கல்வித்துறைகளின் முன்னோடி<br>**சுப்றா (14)**<br>பிரதான வீதி, சித்தன்கேணி. | **ஸ்ரீ கணேசா அன்சன் பல்பொருள் வாணிபம்**<br>சிவன் கோயிலடி, சித்தன்கேணி. | **சோபிகா மருந்தகம்**<br>பிரதான வீதி, சுழிபுரம். |
| **S.L.K.லக்சுமி அழகு மாளிகை**<br>NO.3, காரைநகர் வீதி, சங்கானை. | **கஜனி வீடியோ அன் கஜனி பல்பொருள் வாணிபம்**<br>வட்டுக்கோட்டை வீதி, சித்தன்கேணி. | அன்பளிப்புப் பொருள்கள் இலத்திரனியல் உபகரணங்களுக்கு<br>**மிலேனியம் பஷன்ஸ் ஹவுஸ்**<br>சித்தன்கேணிச் சந்தி, சித்தன்கேணி. | **ரஜனி கூல் பலஸ்**<br>சித்தன்கேணிச் சந்தி, சித்தன்கேணி. | **பன் பாமசி**<br>அனைத்து ஆங்கில மருந்து வகைகள் நியாயமான விலையில் கிடைக்கும்.<br>பிரதான வீதி, சித்தன்கேணி. |

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.7

வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஒட்லி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-202)

## மந்திகை ஆஸ்பத்திரியில் வைத்திய ஆலோசனை

குருநகர்,செப்.7

மார்புநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். முகுந்தன் காது, மூக்கு, தொண்டை ஆகிய வற்றைப் பரிசோதிக்கும் டாக்டர் திரு மதி முகுந்தன் ஆகியோர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வை யிடவுள்ளனர்.

இவர்களது வைத்திய ஆலோசனையும், சிகிச்சையும் மாதத்தில் ஒன்றுவிட்ட சனிக் கிழமைகளில் நடைபெறவுள்ளது என்றும்-

எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள இச் சிகிச்சை மீண்டும் 24 ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறும் என்றும்- அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாள்களில் மேற்படி வைத்திய நிபு ணர்களிடம் சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளு மாறு நோயாளர்களை யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார். (எ-51)

## மண்டைதீவில் நடமாடும் வைத்திய சேவை

யாழ்ப்பாணம்,செப்.7

மண்டைதீவில் மீளக்குடியமர்ந்துள்ள மக் களின் நலன் கருதி வாரத்தில் இரண்டு நாள்கள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனையினால் நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இங்கு மீளக் குடியமர்ந்துள்ள சுமார் 400 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சாதாரண நோய்களுக்குக் கூட சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து யாழ்.ஆஸ்பத்திரிக்கு சென்றுவர வேண்டியிருப்பதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

மண்டைதீவுப் பகுதி மக்களின் மருத்துவப் பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு வாரத் தில் திங்கள், வியாழன் ஆகிய இரண்டு நாள் களில் இந்த நடமாடும் மருத்துவ சேவை நடத் தப்பட்டு வருவதாக யாழ்.சுகாதாரத் திணைக் கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-ரி)

## கோடரி வெட்டுக்கு இலக்காகிக் காயம்

தென்மராட்சி,செப்.7

பனைமரம் தறித்துக் கொண்டிருந்தவரின் கோடரி கை தவறி அருகில்நின்றவரின் கை விரல்களைத் துண்டித்ததாகக் கூறப்படும் சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டுவில் வடக் கில் இடம்பெற்றது.

இரு விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலை யில் இதே இடத்தைச் சேர்ந்த நடுவிலான் நடேசபிள்ளை (வயது 40) என்பவர் சாவகச் சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட் டார். (117)


**கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்**

10.09.2005
14.09.2005 } முற்பகல் 10 மணி

அனைத்து Diploma கற்கைநெறி களுக்குமான வார, வார இறுதிப் பிரிவு கள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறி யத் தருகின்றோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

(சி-44893)



**CATWAS.COM**
Computer Academy
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna
TP: 021-222 3805

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

Microsoft Office
Desk Top Publishing
Diploma in Hardware
Duration: One Month / Two Months / Three Months

வார இறுதி நாளுக்கான பிரிவு 10.09.2005 ம் திகதியும்
வார நாள்களுக்கான பிரிவு 12.09.2005 ம் திகதியும் ஆரம்பிக்கப்படும்

**Diploma Courses**

| | |
|---|---|
| Microsoft Office | 1750/= |
| DeskTop Publishing | 2000/= |
| Hard Ware | 1800/= |
| Web Page Designing | 3000/= |

**Certificate Courses**

Word XP, Excel XP, Access XP, PowerPoint XP, Page Maker 7, Corel Draw 11, Photo Shop 7, HTML, Cool 3D

**Kids Program**

✓ உங்கள் பாடநெறியை பூர்த்தி செய்து விரைவாக சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளுங்கள்.
✓ கூடிய செய்முறை பயிற்சிகள்
✓ Online விரிவுரைகள்

வகுப்புக்கள் யாவும் 10/09/2005 12/09/2005 ஆரம்பமாகும்


## ஏழாவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
21 - 05 - 1981

உதிர்வு
25 - 08 - 1998



### செல்வி நாகேந்திரம் நிஷாலினி (சுகி)

(பரு/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பழைய மாணவி)

திதி: ஆவணிச் சதுர்த்தி

*சப்த ஆண்டுகள் சங்கமமாகி*
*அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு அருகதையாகி*
*நிர்க்கதியான எமக்கு கலங்கரை விளக்காகி*
*என்றென்றும் எம்மனதில் நிலைத்து நிற்கும்*
*''சுகி'' யின் நினைவோடு வாழ்வோமாக.*
*உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

உன் பிரிவால் என்றென்றும் வாடிநிற்கும்
**பெற்றோர், உறவினர்கள்.**

''சுகிஸ்தான்'',
அல்வாய் தெற்கு, அல்வாய்.

(39661)(32-16-15-21)

## ஒப்பந்த அடிப்படையிலான மீள்நியமன விண்ணப்பம் கோரல் - 2006

### சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பிரிவு - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள வெற்றிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனத் தில் 2006 ஆம் ஆண்டு காலத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் பதவிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

1. வைத்திய உத்தியோகத்தர்
2. பதிவு வைத்திய உத்தியோகத்தர்/உதவி வைத்திய உத்தியோகத்தர்
3. மருந்தாளர்
4. ஆய்வு கூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்
5. தாதிய உத்தியோகத்தர்
6. குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்
7. ஊடகக் கதிர் படப்பிடிப்பாளர்
8. பொதுசுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்
9. மருந்துக் கலவையாளர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் ஆவணங்களுடன் 14.09.2005 ஆம் திகதிக்கு முன்னர் ***சுகாதார சேவைகள், மாகாணப் பிரதிப் பணிப்பாளர், சு.சே.மா.பி.ப.பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்*** என்ற முகவரிக்கு பின்வரும் ஆவணங்களின் 4 பிரதிகளுடன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

1. ஓய்வூதியக் கொடைப் பத்திரம்.
2. இறுதியாகப் பெற்றுக்கொண்ட சம்பள படிநிலையில் கடமையாற்றுவதற்கான சம்மதக் கடிதம்.
3. சமாதான நீதிவானின் நற்சான்றிதழ்.
4. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எப்பகுதியிலும் கடமையாற்று வதற்கான சம்மதக் கடிதம்.
5. தற்போதைய உடல், உள நிலைபற்றிய மருத்துவ உத்தியோ கத்தரின் சான்றிதழ்.
6. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
7. 60 வயதுக்கு உட்பட்டவரெனில் தனது ஓய்வூதியத்தை உறைநிலையில் வைப்பதற்கான சம்மதக்கடிதம்.

**வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன்,**
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-45048)(32-21-16)

## 45 ஆம் நாள் கண்ணீர்க் காணிக்கை

இல்லத்தில் கொழுந்தாக
28 - 11 - 1980

இதயத்தில் இருப்பிடமாக
25 - 07 - 2005



### அமரர் சிவசுப்பிரமணியம் மயூரன்

நெஞ்சினில் நீ சுமந்தாய் கனவுகள் - கோடி
வஞ்சகரை உறவென எண்ணினாய்- நாடி
பிஞ்சு உனக்கு நஞ்சு வலை விரித்தனர் - தேடி
தஞ்சமென நீ நினைத்த பொன்னம்பலவானேசர்- கூட
வஞ்சகம் செய்து விட்டாரோ? - கூடி
கொஞ்சு மொழிமுகம் காணாது- உன்னை
வஞ்சனையால் கொன்றுவிட்டார் - கயவர்
நெஞ்சக் குமுறல் இது- புலம்பலில்லை
தஞ்சமென வந்தோர்க்கு அஞ்சாது - பகிர்ந்தவனே!
ஆண்டாண்டு சென்றாலும் ஆறாது... இக்கொடுமை!
அழுது துடிக்கின்றோம் ஆண்டவன் - நின்றறுப்பான்
அன்புத் தெய்வமே! அடைக நின் சாந்தி!

உன் பிரிவால் துடித்து வாழும்:
அப்பா, அம்மா,
தம்பிமார்.

'சுந்தரபவனம்'
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

(39677)(21.16.15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
16 - 10 - 1979

அநியாய அழிப்பு
07 - 09 - 2004



### நவரத்தினராசா பிறேம்குமார் (பிறேம்)

**வாழும் வயதினில் வானுலகம்**
**சென்றாயோ**
**ஈன இரக்கமின்றி கொடுமையாகத்**
**தாக்கப்பட்டு இன்னுயிர் நீத்தீரோ**
**ஆவி பிரியும் போது என்ன எண்ணிப்**
**பிரிந்தாயோ நாமறியோம்!**
**உன் வாகனமும் இல்லை**
**உன்னைத் தாக்கியவனும் இல்லை**
**தினமும் உன்னை நினைத்து**
**கலங்கியபடி உள்ளோம்.**

**- குடும்பத்தினர்.**

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(39665)(21.16.15)


**Mother board சிறப்புச் சலுகை**




**Intel processor**
I865GVM7
for New P4/Celeron D
FSB 800/533
3 x DDR400/333/266
6 Channel Audio
8X AGP
8 x USB, & SATA
3 x PCI, 10/100 LAN
intel.


**AMD processor**
KVT 600X-L
for AMD-K7 CPU
FSB 533/400
2 x DDR 400
2 channel Audio
8x AGP slot
8 x USB, & SATA
3 x PCI, 10/100 LAN
AMD

**Intel processor**
I845GLM-AGP
for P4/Prescott
FSB 533/400
2 x DDR SDRAM266
6 Channel Audio
8X AGP
6 x USB, & SATA
3 x PCI, 10/100 LAN
intel.

**Mercury**
Empowering your PC
ஆசியா-பசிபிக்கில் 70வீதாசார
சந்தையைக் கொண்டுள்ளது
இந்தியாவின் 1ஆவது மதர் போர்ட்
இலங்கைமுழுவதும் பரந்த 256 முகவர் சந்தை
நிலையங்களில் பராமரிப்பும் விற்பனையும்

**MiPAQ PC Series**

Intel: Prescott/HT, P4, Celeron
AMD: Duron, Athlon, Sempron




ரூ 48,600/= தொடக்கம்

2.4 Intel Celeron, 15" Monitor
Intel 845 Mother board, 64MB VGA
128 DDR, 80GB HDD, 52X CD ROM
1.44 MB FDD, PS2 MM Keyboard
Optical mouse, Casing, Sound+Speaker

**Free faxmodem & 25 hours internet & E-mail.**

**MICRO PC SYSTEMS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 175/3 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் தொலை: 021 2225893, 077 3126712 |
| நெல்லியடி | பிரதான வீதி, (நெல்லியடி, பொலிஸ் நிலையம் அருகில்) தொலை: 077 3039536 |
| வவுனியா | 73C, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா, தொலை 024 4588339, 0777308417 |
| கொழும்பு - 06 | 15, 36வது ஒழுங்கை, வெள்ளவத்தை தொலை: 011-4516764 |
| கொழும்பு - 13 | 310 ,ஜோர்ஜ் ஆர். டி. சில்வா மாவத்தை கொட்டாஞ்சேனை தொலை 4619673 |
| திருகோணமலை | 148, பிரதான வீதி, திருகோணமலை. தொலை: 026 222 1054, 078 8720639 |

## 20 வருடங்களின் பின் சாதனை

# தேசிய மட்ட பெருவிளையாட்டுகளில் யாழ்ப்பாணத்துக்கு இரு வெற்றிகள்!

யாழ்ப்பாணம்,செப்.7

கொழும்பில் தற்சமயம் நடைபெற்றுவரும் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகளில் யாழ்ப்பாணத்துக்கு இரு வெற்றிகள் கிடைத்துள்ளன.

1985ஆம் ஆண்டுக்குப் பின் யாழ். மாவட்டத்துக்கு இந்த வெற்றிகள் கிட்டியுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த வலைபந்தாட்டப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 3ஆம் இடத்தைப் பெற்று சாதனை புரிந்திருந்தது.

கடந்த சனிக்கிழமை வத்தளை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் இடம்பெற்றன. இதில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி 2ஆம் இடத்தைப் பெற்றது. முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலை அணிகள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டன.

வடக்கு - கிழக்கில் ஆண்கள் பிரிவில் முதலிடம் பெற்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்ற கொக்கிளாய் ஜி.ரி.எம்.பாடசாலை, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியனவும் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றின.

இந்தப் போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரி 2ஆம் இடத்தைப் பெற்று சாதனை புரிந்துள்ளது.

1985ஆம் ஆண்டுக்குப் பின் முதல் தடவையாக பெரு விளையாட்டுக்களில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் வெற்றிபெற்றுள்ளன.

உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி 2 ஆம் இடத்தையும் -

வலைபந்தாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 3ஆம் இடத்தையும் பெற்றுச் சாதனை புரிந்துள்ளன.

கடந்த வருடம் தேசிய மட்டப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் இருந்து பங்குபற்றியவர்களில் ஸ்ரான்லிக் கல்லூரி மாணவி தர்சினி குணரத்தினம் மட்டும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## உதைபந்தாட்டம் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.7

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே உதைபந்தாட்டம், தாச்சிப் போட்டிகளை நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதனுடன் தொடர்புடைய ஆசிரியர்களை இந்தக் கலந்துரையாடலுக்கு வருகை தருமாறு கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் கேட்டுள்ளார்.

இதேவேளை, இக்கலந்துரையாடல் இன்று புதன்கிழமை நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கேதீஸ்வரன் 'ஹட்ரிக்' சாதனை

யாழ்ப்பாணம்,செப்.7

சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர் கேதீஸ்வரன் 'ஹட்ரிக்' சாதனை புரிந்துள்ளார்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் இடையில் கடந்த புதன்கிழமை நடந்த 15 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டத்திலேயே அவர் இச்சாதனையைப் படைத்தார்.

இந்த ஆட்டத்தில் அவர் 24 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். (3-190)

## வலைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,செப்.7

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் பெண்களுக்கான வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுவில் பாடசாலைகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (3-410-203)

## ஊர்காவற்றுறையில் இன்று விளையாட்டு விழா

ஊர்காவற்றுறை,செப்.7

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறைப் பிரதேச சபை வடக்கு- கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய வழிகாட்டலில் ஊர்காவற்றுறைப் பிரதேச முன்பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டு விழா ஒன்றை நடத்தவிருக்கிறது. இந்த விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறைப் பொது நூலகத்திற்கு முன்பாக நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் செயலாளர் எ.கணேசானந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தீவகக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கணபதி பிரதம விருந்தினராகவும் ஊர்காவற்றுறை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.மகேந்திரன், மக்கள் கட்டமைப்பு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் இளமாறன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (3-16-203)

## கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி பாரதி வி.கழகம் சம்பியன்

சுண்டுக்குளிசனசமூகநிலையத்தின்77ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு உள்ளூர்க் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட 'ஓவர்கேம்' கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் பாரதி சனசமூக நிலைய வி.க அணி வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சுண்டுக்குளி சனசமூக நிலைய வி.க.அணியை எதிர்த்து பாரதி சனசமூக நிலைய வி.க அணி மோதியது.

பாரதி சனசமூக நிலைய வி.க.அணியை எதிர்த்து விளையாடிய சுண்டுக்குளி சனசமூக நிலைய வி.க.அணி 14:2, 14:6, 16:14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு நடுவராக கே.நகேந்திரம் கடமையாற்றினார். (3-190)

## வல்வை உல்லாசக் கடற்கரையில் மாபெரும் விளையாட்டு விழா

வடமராட்சி, செப்.7

வல்வெட்டித்துறை உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் 17ஆம், 18 ஆம் திகதிகளில் வல்வெட்டித்துறை உல்லாசக் கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆண்களுக்கான 50 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டி, பெண்களுக்கான 10 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டி, கழக அஞ்ச லோட்டப் போட்டி என்பனவும் - பிற்பகல் 3.30 மணிக்கு கடல் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளும் இடம்பெறும்.

மறுநாள் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆண்களுக்கான 20 கிலோமீற்றர் மரதன் ஓட்டப்போட்டி, பெண்களுக்கான 10 கிலோமீற்றர் மரதன் ஓட்டப் போட்டி, விநோத உடைப்போட்டி ஆகியனவும் -

பிற்பகல் 4.30 மணிக்கு தலையணைச் சண்டை, தம்பதிகள் நீர் நிரப்புதல், முட்டை உடைத்தல் போன்ற போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் வல்வெட்டித்துறை உதயசூரியன் விளையாட்டுக் கழகத்துடன் நேரிலோ தபால் மூலமோ தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-173-203)

## ஜனசக்தி கிண்ண உதைபந்தாட்டம்

# சிவானந்தா, சென்.சேவியர் அணிகள் கால் இறுதியாட்டத்திற்குத் தகுதி

பருத்தித்துறை லீக் நடத்தும் ஜனசக்தி சுழல் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சிவானந்தா வி.கழகமும் சென். சேவியர் வி.கழகமும் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்டம் தொடங்கி 3 ஆவது நிமிடத்தில் சிவானந்தா அணி வீரர் வினோதரன் தமக்கு கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி தனது அணிக்கான முதல் கோலைப் பெற்றுக் கொடுத்தார். பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் கோல் போடுவதற்கு பகீரதப்பிரயத்தனம் செய்தபோதும் அது கைகூடவில்லை. இந்நிலையில், 1:0 என்ற கோல் அடிப்படையில் இடைவேளைக்கு ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களுள் சிவானந்தா அணி வீரர் ரஜீகரன் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு எதிர் அணியினருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். ஆட்டம் தொடங்கி 20 ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர் கிருஷ்ணகுமார் மிகவும் சிரமப்பட்டு தனது அணிக்காக முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து சிவானந்தா அணிவீரன் கிருபா மேலும் ஒரு கோலை போட்டு தமது அணியின் கோல் எண்ணிக்கையை நான்காக உயர்த்தினார். இறுதியில் 4:1 என்ற கோல் கணக்கில் சிவானந்தா வி.க. வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

அடுத்து இடம்பெற்ற 2ஆவது ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் வி.கழகமும், சென்.சேவியர் வி.கழகமும் மோதின. போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றபோதும் இடைவேளைக்கு முன்னர் பருத்தித்துறை சென்.சேவியர் அணியினர் 2 கோல்களைப் போட்டனர்.

இடைவேளைக்குப்பின் ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்து ஆட்டம் ஆரம்பமாகி ஒரு சில நிமிடங்களில் யங்கம்பன்ஸ் அணிக்கு கோல் பெறும் சந்தர்ப்பம் கிடைத்த போதும் அதனை அவர்கள் சரியாகப் பயன்படுத்தாமல் தவறவிட்டனர். இருந்தபோதும் 5 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணி வீரர்கள் கடுமையாகப் போராடி ஒரு கோலைப் போட்டனர். தொடர்ந்து பருத்தித்துறை சென். சேவியர் வி.கழக வீரர் யோகன் ஒரு கோலைப் போட்டு தமது அணியின் கோல்களின் எண்ணிக்கையை உயர்த்தினார். இறுதியில் சென். சேவியர் அணி 3:1 என்ற கோல் அடிப்படையில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியைத் தோற்கடித்து காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (3-410)

## ஸ்கந்தா ஸ்ரார் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

# யுனிபைற் 8 விக்கெட்டுகளால் வெற்றி!

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ். விளையாட்டுத்துறையின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் அமரர் ஜெயசோதி துஷ்யந்தன் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஓர் ஆட்டத்தில் யுனிபைற் வி.க. அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

மானிப்பாய் பரிஸ் வி.க. அணிக்கும் யுனிபைற் வி.க. அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் வி.க. அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றது.

பார்த்தீபன், வீரசிங்கம் ஆகியோர் ஆட்டம் இழக்காமல் 34, 36 அகிய ஓட்டங்களையும் ஜெயராஜ், பாஸ்கரன், ஜெயதீபன் ஆகியோர் முறையே 31, 9, 9 ஆகிய ஓட்டங்களை யும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

வினோ மூன்று விக்கெட்டுக்களையும் கங்காதரன், அனுசன், பகீதரன், லங்கேஸ்வரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யுனிபைற் வி.க. அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெனகன், வினோ, றொபின்சன் ஆகியோர் முறையே 28, 52, 54 ஆகிய ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சாத்வீகன், சுபாஸ்கரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக யுனிபைற் வி.க. அணி வீரன் வினோ தெரிவுசெய்யப்பட்டார்.(3-190)

## யாழ்.பல்கலை அணி வெற்றியீட்டியது!

இந்தச் சுற்றுப்போட்டியின் மற்றோர் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக வி.க. அணியும் வடதாரகை வி.க. அணியும் மோதியதில் யாழ். பல்கலைக்கழக வி.க. அணி 72 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக வி.க. அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.

அருள்ராஜ் ஆட்டம் இழக்காமல் 46 ஓட்டங்களையும் மணிவண்ணன், தனுஸ்காந், பந்துலன் ஆகியோர் முறையயே 19, 32, 33 ஆகிய ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ஜெயந்தன், துஸ்யந்தன், ஸ்கந்தகுமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வடதாரகை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஜெயகாந்தன், அரவிந்தன், ஜெயகரன், கஜவதனன்,ராஜபவன் ஆகியோர் முறையே 22, 15, 13, 11,9 ஆகிய ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ரவிசங்கர் நான்கு விக்கெட்டுக்களையும் அருள்ராஜ் இரண்டு விக்கெட்டுக்களையும் நிசாந்தன், லம்போதரன் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக யாழ். பல்கலைக்கழக அணி வீரர் அருள்ராஜ் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)

## பரபரப்பு ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் வென்றது

இந்தச் சுற்றுப்போட்டியின் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் வி.க. அணியும் யுனிபைற் வி.க அணியும் மோதியதில் ஜொலிஸ்ரார் வி.க. அணி இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யுனிபைற் வி.க. அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

நிமலேஸ், ஜெனகன்,வினோ, றொபின்சன், அனுசன் ஆகியோர் முறையே 10, 37,11,15,20 ஆகிய ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

லக்மிகாந் மூன்று விக்கெட்டுக்களையும் ஆதவன் இரண்டு விக்கெட்டுக்களையும் பிரபாகரன், சைலேஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் வி.க. அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெனார்த்தனன், பிரபாகரன் முறையே ஆட்டம் இழக்காமல் 23, 38 ஆகிய ஓட்டங்களையும் கிருஸ்ணராஜ், சைலேஸ் முறையே 11, 18 ஆகிய ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

அனுஷன் மூன்று விக்கெட்டுக்களையும் கங்காதரன், குமரன், வினோ, றங்கேஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இந்த ஆட்டத்தின் இறுதி ஓவரில் ஜொலிஸ்ரார் வி.க. அணியினர் 5 பந்துகளில் ஆறு ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் யுனிபைற் வி.க. அணி வீரர் றங்கேஸ் வீசிய முதலாவது பந்தினை ஜொலிஸ்ரார் வி.க. அணி வீரர் ஜெனார்த்தனன் ஓங்கி அடித்து ஆறு ஓட்டங்களைப் பெற்று தனது அணிக்கான வெற்றியினை உறுதிசெய்தார்.

ஆட்டநாயகனாக ஜொலிஸ்ரார் வி.க. வீரர் பிரபாகரன் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


### விற்பனைக்கு

லான்சர் ரக (China - Custom 90 ) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. கிழமை நாள்களில் காலை 10 மணிமுதல் மாலை 5 மணி வரை தொடர்புகொள்ளலாம். தொடர்பு: T.P.: 021 222 7893. (39672)

### ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ளவும். உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் ஒரு முறை நாடுங்கள். இந்தியப் பரம்பரை ஜோதிடர் அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (39656)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், ஆஸ்திரேலியாவில் நிரந்தர உத்தியோகம் பார்க்கும் 5 அடி 11 அங்குலம் உயரமுள்ள 46 வயது, உத்தராடம் 4ஆம் பாதம் மணமகனுக்கு 36 வயதிற்குட்பட்ட 5 அடி 5 அங்குலத்துக்கு குறையாத உயரமுள்ள ஓரளவு சமய வழிபாடும் படிப்பும் கொண்ட மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2695, மே/பா உதயன். (59681)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, லக்கினத்தில் செவ்வாய் உயரம் 5' 2'' 1980ஆம் ஆண்டு பிறந்த கிரகபாவம் கூடிய சிவந்த அழகிய மணமகளுக்கு மணமகன் தேவை தொடர்பு: விளம்பர இல. 2694, மே/பா உதயன்.(39644)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39657)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர்-1 பகிராபுறொயிலர்குஞ்சுகள் 07.09.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ் -ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை - முதலாம் கட்டை பருத்தித்துறை, றஞ்சித் - 517, ஸ்ரான்லி றோட், றாதா- மாவடி வட்டுக்கோட்டை, P.ரவி -சாவகச்சேரி. T.P.No.: 222 2867, 222 3529. (39474)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39655)

### தேவை

புறொயிலர் கோழி கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: வீனஸ்பாம், இல.79/12, பலாலி வீதி, திருநெல்வேலி. (சந்திக்கருகில்) T.P.: 021- 222 5692, 0777- 252478. (39690)


# யாழ். இளைஞன் பிரான்ஸில் மரணம்

தொல்புரம், செப்.7

யாழ்.இளைஞர் ஒருவன் பிரான்ஸ் நாட்டில் விபத்தொன்றில் மரணமடைந்துள்ளார்.

தொல்புரம் மத்தி, சுழிபுரத்தைச் சேர்ந்த நித்தியானந்தன் தர்ஷன் (வயது 24) என்னும் இளைஞரே மரணமடைந்தவராவார்.

பிரான்ஸில் அந்த இளைஞர் தங்கியிருந்த வீட்டில் மின்குமிழ் ஒன்றினை கதிரை மீது ஏறிநின்று பொருத்தியபோது தவறுதலாக கதிரை சறுக்கி கீழே விழுந்ததால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இம்மரணம் சம்பவித்ததாகக் கூறப்பட்டது. (9-119)


# Immediate Vacancy

**solidar**

An INGO consortium including NPA, SAH and ASB

**Project Coordinator - Rehabilitation and Physical Infrastructure Development**

Applications are requested from experienced persons in the field of Health and Rehabilitation, Management and Co-Ordination.

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad range of portfolio of projects. The Solidar network in Sri Lanka comprises of three international NGOs - Arbeiter-Samariler -Bund (ASB) Norwegian People's Aid (NPA), and Swiss Labour Assistance (SAH)

The position is based in Killinochchi. The Project Proposes the creation of Trauma. Counseling and Rehabilitation Centre to respond to the needs of people with disabilities as well as skill development and strengthening. The selected candidate will work in collaboration with the project manager coordinate and implement activities relating the project.

**Duties will include**

- Collaboration on needs assessments with the local partner
- Ientification of beneficiaries relating the Project activities
- Planning and strategizing the project activities and awareness programmes
- Resource management and reporting

**Required qualifications**

- Atleast 3-5 years experience in the relevant field with excellnt references
- Advanced Computer skills
- Communication skills with fluency in written/spoken English and Tamil language skills in Sinhala would be an advantage
- The Applicant should work independently and motivated in relation to excellent social communication skills
- A marked understanding of disability and beneficiaries Requirements

**Period of Contract**

One Year

Extension will be considered based on the performance and the requirement at the time

Cover letter and curriculum vitae should be addressed to

**Mr.Kathrin Klermm Solildar no 156 Jaffna Road, Paranthan (Tel 021-228 5070/5107)**

**Deadline for application is 16th of September 2005**

Norwegian People's Aid

ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.

Swiss Labour Assistance SAH



# Sikkim Manipal University, India

**ADMISSION ANNOUNCEMENT FOR - OCTOBER 2005**

**Bachelor of Science in Information Technology (BSc IT)**

**Bachelor of Business Administration (BBA)**



## Bachelor of Science in Information Technology

ELIGIBILITY : A/L 3 passes (Pending results) DURATION : 3 years

**PROGRAM STRUCTURE**

FIRST SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| DT0001 | Basics of information technology | 1 |
| DT0002 | Window based applications | 3 |
| DT0003 | Introduction to database with Access | 4 |
| DT0004 | Business applications of IT | 4 |
| DT0005 | Internet/multimedia | 4 |
| | TOTAL CREDITS | 16 |

SECOND SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| BT0006 | Communication skills in English | 1 |
| BT0007 | Basic mathematics | 3 |
| BT0008 | Object oriented programming | 4 |
| BT0009 | Java programming | 4 |
| BT0010 | Oracle/developer 2000 | 4 |
| | TOTAL CREDITS | 32 |

THIRD SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| BT0011 | Computer oriented numeric methods | 4 |
| BT0012 | Visual basic | 4 |
| BT0013 | Object oriented analysis & design | 2 |
| BT0014 | Website management & design | 4 |
| BT0015 | Website project | 2 |
| | TOTAL CREDITS | 48 |

FORTH SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| BT0016 | Accounting principles & practice | 1 |
| BT0017 | Communication technology | 3 |
| BT0018 | VC++ | 4 |
| BT0019 | Software engineering | 4 |
| BT0020 | Project | 4 |
| | TOTAL CREDITS | 64 |

FIFTH SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| BT0021 | Data warehousing & mining | 4 |
| BT0022 | Oracle 9i & distributed database | 4 |
| BT0023 | Fundamentals of e-Commerce | 2 |
| BT0024 | S/W project management | 4 |
| | TOTAL CREDITS | 80 |

SIXTH SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| BT0025 | Strategic use of information technology | 4 |
| BT0026 | SW quality assurance | 2 |
| BT0027 | New technologies | 4 |
| BT0028 | Project | 4 |
| | TOTAL CREDITS | 96 |

## Bachelor of Business Administration

ELIGIBILITY : A/L 3 passes (Pending results) DURATION : 3 years

**PROGRAM STRUCTURE**

FIRST SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| BB0001 | Marketing | 2 |
| BB0002 | Organization behavior | 2 |
| BB0003 | Organization, competition & environment | 2 |
| BB0004 | Communication skills in English | 2 |
| BB0005 | Computer fundamentals | 4 |
| BB0006 | Financial accounting | 4 |
| | TOTAL CREDITS | 16 |

SECOND SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| BB0007 | Management information system | 2 |
| BB0008 | Legal regulatory framework | 2 |
| BB0009 | Business strategy | 4 |
| BB0010 | Quantitativ techniques in business | 4 |
| BB0011 | Managing financial resources | 4 |
| | TOTAL CREDITS | 32 |

THIRD SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| BB0012 | Management accounting | 4 |
| BB0013 | Financial system & auditing | 4 |
| BB0014 | Introduction to internet | 4 |
| BB0015 | Quality management | 2 |
| BB0016 | Small business management | 2 |
| | TOTAL CREDITS | 48 |

FORTH SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| BB0017 | Financial reporting | 2 |
| BB0018 | Human resource management | 2 |
| BB0019 | Taxation | 4 |
| BB0020 | Managing information | 4 |
| BB0021 | Production & operation management | 4 |
| | TOTAL CREDITS | 64 |

FIFTH SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| BB0022 | Capital & money market | 4 |
| BB0023 | Multinational & their roles | 4 |
| BB0024 | Introduction to International marketing | 4 |
| BB0025 | e-Commerce | 2 |
| BB0026 | Introduction to technology management | 2 |
| | TOTAL CREDITS | 80 |

SIXTH SEMESTER

| SUB CODE | TITLE | CREDITS |
|---|---|---|
| BB0027 | Cross-culture aspects of business | 4 |
| BB0028 | Entrepreneurship development | 4 |
| BB0029 | Economic reforms process in India | 4 |
| BB0030 | Role of International financial institutions | 2 |
| BB0031 | Management development | 2 |
| | TOTAL CREDITS | 96 |

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால்
உங்கள் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

www.manipalu.com
**Manipal International Study Center**
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
Tel: 021 222 8060
E-mail:iiscc@sltnet.lk

Manipal INSPIRED BY LIFE



பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த திருமதி எஸ். வோட்சன் ஆகியோர் அடிக்கல்லை நட்டுவைப்பதை முதல் இரு படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்ட பருத்தித்துறை றோ.க. ஆலய அடிகள் அருட்திரு எஸ். இருதயதாஸ், சுனாமி அனர்த்த முகாமைத்துவ யாழ்.செயலகப் பணிப்பாளர் பாலையா ஆகியோரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படம்:சி.சுந்தரலிங்கம்)

## மூக்கம் இடைத்தங்கல் முகாமில் நிரந்தர வீடமைப்புத் திட்டம்

கரவெட்டி,செப்.7

தும்பளை கிழக்கு மூக்கம் இடைத்தங்கல் முகாமிலுள்ள மக்களுக்கான நிரந்தர வீடுகள் அமைக்கும் திட்டத்தைத் தென் இந்திய திருச்சபையுடன் யாழ்.மாவட்ட மெதடிஸ்த திருச்சபையும் இணைந்து ஆரம்பித்து வைத்துள்ளன.

மேற்படி நிகழ்வு அண்மையில் தும்பளை கிழக்கு, மூக்கம் இடைத்தங்கல் முகாமில் மருதனார்மட இறையாள்கை அருட்திரு ரி.தேவனேசன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி நிரந்தர வீடுகளில் பத்து வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டது.

இதில் முதல் வீட்டுக்கான அடிக்கல்லை பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் நட்டார். அவரைத் தொடர்ந்து சுனாமி அனர்த்த நிவாரண யாழ். மாவட்டப் பணிமனைப் பணிப்பாளர் சு.பாலையா, திருமதி எஸ். வோட்சன், யாழ்.தென்னிந்திய திருச்சபை இயக்குநர் மில்டன் சொல்மன், பருத்தித்துறை முனைப்பகுதி றோமன் கத்தோலிக்க திருச்சபை பிதா எஸ்.இருதயதாஸ், பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை பிதா எஸ்.சதிஸ்குமார் ஆகியோரும் அடிக்கல்லை நட்டனர். (9-70)

## உலக உணவுத் திட்டத்தினால் ஏழு இடங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப்.7

மிதிவெடி அபாயம் இல்லாத ஏழு இடங்களில் உலக உணவுத் திட்டம் மூலம் அபிவிருத்திப் பணிகள் இடம்பெறவுள்ளன.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

உலக உணவு வேலைத் திட்டத்தின் கீழ் 4 மயானம் மற்றும் 3 வாய்க்கால்களின் புனரமைப்பு வேலைகள் மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனடிப்படையில், காக்கை தீவு எருக்கலப்பிட்டி இந்துமயானம், நவாலி வடக்கு ஆரியம்பிட்டி இந்துமயானம், பிரான்பற்று தம்பித்துரை இந்துமயானம், விளான் சூரியன் கலட்டி (கிராய்ட்டி) மயானம் என்பனவும் -

காக்கை தீவு வெள்ளவாய்க்கால், ஆனைக்கோட்டை - நவாலி கங்கையான் வாய்க்கால், சாவல்கட்டு - ஆனைக்கோட்டை அந்துக்குழி வாய்க்கால் என்பனவும் -

உலக உணவு வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

(9-185)

## சாவகச்சேரி வைத்தியசாலை விரைவில் புனரமைக்கப்படும்

### 'நிக்கொட்' திட்டத்தில் ரூபா 75 மில்லியன் ஒதுக்கீடு

சாவகச்சேரி,செப்.7

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் - 75 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வைத்தியர்களுக்கான விடுதி, சமையலறை, பிரேத அறை, நவீன வசதிகள் கொண்ட நோயாளர் விடுதி, நிர்வாக அறை என்பன அமைக்கப்படவிருக்கின்றன.

கடந்த 2000 ஆம் ஆண்டு தென்மராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இந்த வைத்தியசாலை பெரிதும் சேதமடைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் தற்போது குறைந்தளவு வசதிகளுடன் இந்த வைத்தியசாலை இயங்கி வருகின்றது. (த-31)

## மோ.சைக்கிளில் சென்ற நபர் தாக்கப்பட்டார்

தென்மராட்சி, செப்.7

ஓட்டோவில் சென்றோர் மோட்டார் சைக்கிளில் சென்றவரை உதைத்து விட்டுத் தப்பியோடினார்கள்.

இச்சம்பவம் அண்மையில் மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் குணபாலசிங்கம் (வயது 30) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (9-117)

## முன்பள்ளி ஆசிரியருக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

வலிகாமம் தெற்கு, செப்.7

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினரால் வலிகாமம், நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அண்மையில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

வலிகாமம் வலய முன்பள்ளி ஆசிரியர்கள் பதினொருபேருக்கும், நல்லூரில் அமைந்துள்ள யாக்கோபு முன்பள்ளி ஆசிரியர்கள் எட்டுப்பேருக்கும் இத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

ஆனைக்கோட்டை கூழாவடிப் பகுதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட வடக்கு-கிழக்கு முன்பள்ளி கல்விமேம்பாட்டு வள நிலையத்தில் வைத்து இவை வழங்கப்பட்டன. (152)

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழாச் சிறப்பம்சம்

### காத்திட இன்னுமேன் தாமதம்?

சங்கரி செவந்தரி சாமுண்டி
சகல கலா வல்லி நீயே !
புங்கவி உலகு போற்ற
பூதலம் காப்பாய் நீயே !
மங்கள ரூபினி மதிமுக வதனி
மாதவக் கொழுந்து நீயே !
சங்கடம் தீர்த்தெமை காத்திடும்
சமய சஞ்சீவி நீயே !
இங்குனை விட்டிடிய் இனிக்கதி எமக்கிலை
இனி தெமைக் காப்பாய் நீயே !
எங்களைக் காத்திட இன்னுமேன் தாமதம்
எழுந்தருள் வாய் துர்க்கா தாயே !

-விகடகவி



அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயம் - தெல்லிப்பழை

இன்று
நான்காம் திருவிழா



பாடு. பரவு. பணிசெய். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க அனுசரணையுடன்

விழா சிறப்புற வாழ்த்துவோர் :-
ஞானம்ஸ் பிறிண்டேர்ஸ்
கைதடி. தொ.பே: 0777 164613

கூற்றாம் வறுமையைக் கொன்று செல்வத்தைக் தொளிக்கச் செய்திடும் துர்க்கையே!

# வாசகர் திருமுகம்

## ஒளி இல்லா மின்சாரம் !

தென்மராட்சியில் டச்சுவீதி, மந்துவில் ஊரெல்லை வீதி, வேம்பிராய் வயல்கரை வீதிகள் அனைத்தும் மின்சார வசதிகள் இருந்தும் எவ்வித பயனுமில்லாமல் உள்ளது. இரவு 6 மணி தொடக்கம் 11 மணி வரை மின் ஒளி மிகவும் மங்கிய நிலையில் உள்ளது. இதனால் மாணவர்களும்சரி- அரச ஊழியர்களும்சரி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மிகச் சிறிய ஒரு மின் பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்குவதனால் இந்நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக சாவகச்சேரி மின்சாரசபை அதிகாரிக்கும் யாழ்ப்பாணம், சுன்னாக பகுதியில் இதற்காக கடமையில் இருக்கும் மேல் அதிகாரிக்கும் பலமுறை கடித மூலமும் நேரிலும் முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், மின்சாரக் கட்டணங்கள் மட்டும் உரியவேளையில் செலுத்தும்படி எச்சரிக்கையிட்டுள்ளார்கள். மக்கள் கூறும் குறைகளை ஏற்காமல் அலட்சியப் போக்கில் நடந்து கொள்வதனால் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வேதனை அடைகின்றன. மக்கள் குடிமனைகள் குறைந்த பகுதியைத் தமது கவனத்தில் கொண்டு வந்து அந்தப் பகுதிகளுக்கெல்லாம் மின்பிறப்பாக்கிகள் வைக்கப்பட்டுப் புத்துயிர் கொடுக்கும் இவர்கள் எத்தனையோ தடவைகள் முறையிட்டும் எமது பகுதி மின்சாரம் ஒளி சீராக இல்லை. இதற்கு ஒரு தீர்வைப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வே.கிருஷ்ணராசா
*மீசாலை.*

## யாழ்.அரச அலுவலகங்களிலும் தமிழ் மொழியை அமுலாக்குக!

குடாநாட்டில் தமிழ்மொழியை முழுமையாக அரச உத்தியோகத்தர்கள் பயன்படுத்தவேண்டும். இதனை விடுத்து சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் படிவங்களை நிரப்புவதையும் செயற்படுத்துவதையும் அரச உத்தியோகத்தர்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும். பொது மக்களை சிங்களத்திலோ அல்லது ஆங்கிலத்திலோ நிரப்பும்படி அரச உத்தியோகத்தர்கள் வலியுறுத்தக் கூடாது. தமிழ்மொழியிலேயே அனைத்துக் கடமைகளும் இடம்பெறவேண்டம்.

இவ்வாறு யாழ்ப்பாண அரச அதிபர் அரச உத்தியோகத்தர்களை அறிவுறுத்தியமையானது தமிழ்த் தாயின் நெஞ்சத்தை மகிழ்விக்கும் நல்ல செய்தியாகும்.

தமிழ்த்தாய் தன்மக்களாலேயே தான் புறக்கணிக்கப்படுவதை எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றாள் என்பதே மெய்மையாகும்.

ஏனெனில், அரச அலுவலர்களில் பெரும்பாலானோர் விடுமுறை வேண்டுகையையும் ஏனைய படிவங்களையும் ஆங்கிலத்திலேயே நிரப்புகின்றனர். கோவையின் பெயர்களும் பதிவேடுகளின் பெயர்களும் ஆங்கிலத்திலேயே உள்ளன. மேசை மீது வைக்கப்படும் சிலரின் பதவிப் பெயர்கள் ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளன. உலக மக்கள் பலரும் தம் கையெழுத்தைத் தாய் மொழியில் போடுகின்றனர். தமிழர் தம் கையெழுத்தை ஆங்கிலத்தில் போடும் விந்தையை இங்கன்றி வேறு எங்கும் காணோம்.

அரச பணியைப்பெறுவதற்குப் பயன்பட்டது தமிழே. பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறப் பயன்பட்டதும் பைந்தமிழே. தமிழை வயிற்றுக்கும் நெஞ்சத்தை ஆங்கிலத்திற்கும் வைக்கும் இரண்டர்களாக மாறிவிடுகின்ற அவல நிலை இங்குதான் உள்ளது.

இத்தகைய இரண்டர்களை வழிக்குக் கொண்டு வரவேண்டுமாயின், கடிதங்களுக்கு ஒப்பமிடும் உயர் அதிகாரிகள் தமிழல்லாத மடல்களுக்கு ஒப்பமிடுவதில்லை எனத் தீர்மானித்து நடந்து கொள்வார்களாயின் தமிழ் மொழி முழுமையாகப் பயன்படுத்துவதைக் கண்டுகொள்ளலாம்.

யாழ்.அரச அதிபரின் துணிச்சலான அறிவுறுத்தலுக்குக் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் தனது நெஞ்சம் நிறைந்த பாராட்டையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றது.

*கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம்.* **தலைவர்.**

## இறந்தவர் உடலைத் தகனம் செய்வதற்குரிய 'பாஸ்' நடைமுறை ரத்தாகுமா?

சுழிபுரம் திருவடிநிலை சரித்திரப் பிரசித்திபெற்ற ஒரு புண்ணிய ஸ்தலம். சுழிபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர்களும் அயல் கிராமங்களைச் சேர்ந்தவர்களும் இறந்தவர்களின் உடலை இப்புண்ணிய இடத்தில் தகனம் செய்து சாம்பலைக் கடலில் கரைத்து இறுதிக் கடமைகளை நிறைவேற்றுவது வழக்கம்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகி மூன்று வருடங்கள் கழிந்த நிலையிலும் இவ்விடத்தில் இறுதிக் கிரியைகளை நடத்துவதற்குப் படையினரிடம் அனுமதி பெற்றே ஆகவேண்டிய நிலை உள்ளது.

அனுமதி கோருவதற்கு ஆங்கில மொழியில் கடிதம் எழுதி அச்சு அடித்துக் கொடுக்கவேண்டும். அனுமதிகோரும் கடிதத்தில் பொறுப்பான அதிகாரியை மன்றாடிக் கும்பிடும் விதமாக ஆங்கிலச் சொற்களைப் பாவிக்கும் முறை வேதனைக்குரியது.

இப்படியெல்லாம் சிரமப்பட்டு அனுமதி பெற்றாலும் படையினர் நிலைகொண்டுஇருக்கும் இடத்திற்கப்பால் வாகனங்கள் செல்ல அனுமதிக்கமாட்டார்கள். படையினர் நிலைகொண்டிருக்கும் இடத்தில் இருந்து தகனக்கிரியைகள் நடைபெறும் இடம் சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ளது. இதனால், வாகனங்களின் உதவி இல்லாது செல்ல முடியாதவர்கள் எவரும் கிரியைகள் நடைபெறும் இடத்திற்குச் செல்லமுடியாத நிலை உள்ளது.

இந்த அவலநிலையை, உரிமை மீறலை யாரிடம் முறையிடுவது என்று தெரியாது மக்கள் அங்கலாய்க்கின்றார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இவ்விடயத்தில் நடவடிக்கை மேற்கொண்டு 'பாஸ்' முறையை நீக்கி உதவுமாறு சுழிபுரம் முன்னாள் கிராமோதயசபைத்தலைவர் என்ற முறையில் அன்பாக வேண்டுகிறேன்.

மு.சிவராசா (ஆசிரியர்),
*சுழிபுரம் முன்னாள் கிராமோதய சபைத் தலைவர்.*

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 12 - 08 - 1926



மறைவு 09 - 08 - 2005

### முருகர் கந்தர் இளையப்பு

(யாழ்.செயலக இளைப்பாறிய உத்தியோகத்தர், அகில இலங்கை சமாதான நீதிவான், கோப்பாய் திறந்த வெளிச்சிறைச்சாலை மேற்பார்வையாளர்)

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.09.2005) புதன்கிழமை கீரிமலைத் தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை(08.09.2005) வியாழக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. இக்கிரியைகளிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"குமரகிரி",
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (39692)(21.32.16.18) - குடும்பத்தினர்.

---

## தளபாட உற்பத்தியாளர் E.U.T

சுன்னாகம் கிழக்கு,சுன்னாகம்.

### பதவி வெற்றிடம்

1. கணக்குப் பதிவாளர்
2. எழுதுவினைஞர்
3. சிற்றூழியர்

(ஆண், பெண் வயதெல்லை 18- 25)

நேர்முகப் பரீட்சைக்கு 10.09.2005 இல் சமுகந்தரவும். காலை 9.00

★ குறிப்பு: யாழ்.பிரதான சாலையுடன் அமைந்த கடை அல்லது வீடு காட்சியறைக்கு சகல வசதிகளுடனும் தேவைப்படுவதால் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர், E.U.T
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(39684)(32.16.18)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி கற்கண்டு சரஸ்வதி

தோற்றம் 20.11.1940 மறைவு 08.08.2005

உம் ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

08.08.2005 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (07.09.2005) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை. (39698)(39-32-16-18) குடும்பத்தினர்.

---

## Jayoda ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6253268 முதல் 6265856 வரை சீட்டிழுப்பு இல. 165 திகதி 05-9-2005

வெற்றி எண்கள் 1 5 3 2 3 6 சுப்பர் எண் 09

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,38,97,450/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,38,97,450/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 105 | 5,000/- | 5,25,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,081 | 500/- | 5,40,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,705 | 50/- | 5,35,250/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,06,145 | 10/- | 10,61,450/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/- | 40,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 112 | 1,000/- | 1,12,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,066 | 100/- | 1,06,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,622 | 20/- | 2,12,440/- |
| | | மொத்தம் | 46,83,240/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 52,85,840/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 1,41,95,275/-

தொடர் இல. 7193864 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 08 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 6259113-1-07 |
| களுத்துறை | 6254873-8-01 |
| மாத்தறை | 6254056-5-88 |
| நுவரெலியா | 6259557-8-90 |
| கம்பஹா | 6253315-0-38 |
| இரத்தினபுரி | 6258011-6-18 |
| கேகாலை | 6253380-0-25 |
| கம்பஹா | 6265326-9-62 |

---

## WANTED

**Off - Set Machine Operators and Computer Type Setters**

ஒவ் - செற் மெஷின் இயக்குநர்கள் தேவை

ஒரு வருடத்திற்கு குறையாத அநுபவம் உடையவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

கணனி ரைப் செற்றிங் தெரிந்த பெண்கள் தேவை

அநுபவம் உடையவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
183, பலாலி வீதி, கோண்டாவில்.
தொலைபேசி: 021 - 222 6722

---

## மரண அறிவித்தல்

### தம்பையா தம்பி

(கஜமுகன் ஓட்டோ உரிமையாளர்)



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தம்பி 05.09.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.09.2005) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விழிசிட்டி,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.

(39695) (39-32-16-18)

---

## சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வு

சாவகச்சேரி,செப்.7

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வார விழா எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தலைமையில் நகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கணேஸூம் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க.சபாபதிப் பிள்ளை, யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா நகரசபை செயலாளர் மு.செ.சரவணபவன், தென்மராட்சிகோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ. ஈஸ்வரன்-

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலை வைத்திய அதிகாரி ச.அம்பிகைபாகன், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர்மன்றத்தலைவர் வீ. மகாலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் உள்ளூராட்சி வாரத்தை யொட்டி சிறப்பு மலரும் வெளியிடப்படவுள்ளதுடன்- உள்ளூராட்சி வார நிகழ்வை யொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(த-31)

---

## கடிதங்கள் தேக்கம்

முகமாலை, இந்திராபுரம் பகுதி குடியிருப்பாளர்களின் கடிதங்கள் பல எழுதுமட்டுவாழ் உப அஞ்சல் அலுவலகத்தில் விநியோகிக்கமுடியாமல் தேங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்திராபுரம் பகுதி மக்கள் தற்போது வேறு பகுதிகளில் வசித்துவருவதால் அவர்களின் தற்போதைய முகவரி தெரியாததால் கடிதங்களை விநியோகிக்க முடியவில்லை எனவும் -

அப்பகுதி குடியிருப்பாளர்கள் தாம் தற்போது தங்கியுள்ள முகவரியினை உப அஞ்சல் அலுவலகத்திற்கு அறிவித்தல் கடிதங்களை அவர்களது முகவரிக்கு அனுப்பிவைக்கமுடியுமெனவும் - உப அஞ்சல் அதிபர் தெரிவித்தார். (9-117)

## போட்டிகள் ஒத்திவைப்பு

சங்கானை, செப்.7

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.வடக்கு பிரதேச சபை பாடசாலை மாணவர்களுக்கிடையில் எதிர்வரும் 10ஆம் 11ஆம் திகதிகளில் நடத்தவிருந்த கட்டுரை; பேச்சுப்போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 17ஆம் 18ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன என பிரதேச சபைச் செயலர் திருமதி எஸ்.மாணிக்கம் தெரிவித்தார். (29-202)

---

## துயர் பகிர்கின்றோம்

திரு கனகலிங்கம் அவர்களின் அன்புத் தந்தை

### நாகமுத்து பரராசசிங்கம்

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து, மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைப் பகிர்ந்து கொள்வதுடன், ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உப்பு உற்பத்திப் பேட்டை,
ஆனையிறவு. [சி/38349][32-16-18]

பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 19 * 10 * 1919



மறைவு 08 * 08 * 2005

### சின்னையா செல்வரத்தினம்

08.08.2005 இறைபதம் அடைந்த எமது குலவிளக்கு சின்னையா செல்வரத்தினம் அவர்களது வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (07.09.2005) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவிருக்கின்றன. அதைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'திவ்வியபவனம்' சி.கனகரத்தினம் (மகன் - கதிர்வேலவன் அரிசி ஆலை),
கைதடி கிழக்கு, திருமதி பொ.நாகரத்தின் (மகள்),
கைதடி. (39691)(32-16-18) திருமதி தா.விக்னேஸ்வரி (மகள்).

---

## மரண அறிவித்தல்கள்

### கணபதி நடராசா



கொக்குவில் மேற்கு, வராகி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கணபதி நடராசா நேற்று (06.09.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் இராசகுலசேகரம் (பிரான்ஸ்), சந்திரசேகரம் (கட்டட ஒப்பந்தகாரர்), குணசேகரம் (கிளை முகாமையாளர், கோ.ப.தெ.வ.அ.கூ.சங்கம்), ஞானசேகரம் (கட்டட ஒப்பந்தகாரர்), சிவநந்தினி, சிவகலா ஆகியோரின் தந்தையும் செல்வராசா, செல்வரத்தினம், பிரசாந்தி, அனுசியா, ஜெயந்தி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2005) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
வராகி அம்மன் கோயிலடி. [39685][32-15-19]

தகவல்: குடும்பத்தினர்.

### செல்லையா செபரட்ணம்

(இளைப்பாறிய முகாமையாளர், பரந்தன் இரசாயன தொழிற்சாலை, யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவன், யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்)

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் நியூஸிலாந்தை வதிவிடமாகவும் பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற S.S.செபரட்ணம் 05.09.2005 திங்கட்கிழமை நியூஸிலாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்வதி (செல்லக்குட்டி) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற அன்னபூரணியின் அன்புக் கணவரும் பிரகாஷ் (நியூஸிலாந்து), டேவிட் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கமலர் (கனடா), செல்வரட்ணம் (லண்டன்), குணரட்ணம் (வவுனியா), துரைரட்ணம் (லண்டன்), இராசரட்ணம் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.09.2005 சனிக்கிழமை நியூஸிலாந்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. [39687][32-16-18]

தகவல்: வீ.தவரட்ணம் (மைத்துனர்).

**மனோகரா** யாழ்ப்பாணம்

ஜெயம் ரவி, ரேனுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த

**தாஸ்**

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30.

அடுத்த வெளியீடு: சிம்பு, கோபிகா நடித்த

**தொட்டி ஜெயா**

(சி-44110)

---

**நாதன்ஸ் சினிமா**

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்

**இங்கிலீஸ்காரன்**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

(சி-43363)

---

**S.L.A.S**

கட்டுரைத் தொகுப்பு 10.09.2005 இல் கிடைக்கும்.

**D.C.C.A.**

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

---

## மனப்பூர்வமாக பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று ஊர்காவற்றுறை பிரதேசத்திற்குப் பெருமை தேடித் தந்த ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி உடற்பயிற்சி அணியை பாராட்டுவதுடன், இந்த வெற்றிக்கு வழிசமைத்த கல்லூரி சமூகத்தினரை மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*உதவி அரச அதிபர் பணிமனை,*
*தீவகம் வடக்கு,*
*ஊர்காவற்றுறை.* (சி-44916) (11-12-33)

**உதவி அரசாங்க அதிபரும், உத்தியோகத்தர்களும்.**

---

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 01 04 1945 — மறைவு 19 08 2004



**கார்த்திகேசு பஞ்சலிங்கம்**
(கணித ஆசிரியர்)
திதி ஆவணி சதுர்த்தி

**ஆண்டு பல சென்றாலும் பாசமிகு அப்பாவின் நினைவு அலைகள் எமைவிட்டு நீங்காது.**

ஐயா கடையடி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

-குடும்பத்தினர்.
(38707) (11-12-33)

---

## மரண அறிவித்தல்கள்

### *திருமதி மகேஸ்வரி மூத்ததம்பி*

(ஓய்வுபெற்ற ஆசிரியை - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி மூத்ததம்பி அவர்கள் 03.09.2005 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டாக்டர் மூத்ததம்பி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், கனகநாயகி, சற்குணநாயகி, புவனேஸ்வரி, டாக்டர் இராஜநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோதிரட்ணம் (**Malaysia**), பொன்னம்மா (**Canada**), இராஜேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான நடராஜா சிவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிர்மலானந்தன் (**Qatar**), சுமதி, சதானந்தன் (**Norway**), ஹேமவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும், லக்ஷ்மி, உதயகுமார், பாலமீரா, பாலமுரளி ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஷிகா, ஷகானா, ஸ்ருதி, ஹரிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.09.2005) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் (ஹேமவாசா, 8ஆம் கட்டை, தெல்லிப்பழை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2005) வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஹேம வாசா'*
*8ஆம் கட்டை,*
*தெல்லிப்பழை.*
***T.P: 0776158079***

தகவல்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
(சி-44915) (11-12-33)

### *கணபதி இராசரத்தினம்*

(கலாபூஷணம், பிரதிமைக் கலைமாமணி, யாழ். பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் துறை வருகை விரிவுரையாளர்)



காரைநகர், விக்காவிலைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி - இராசரத்தினம் நேற்று (06.09.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அண்ணாவியார் கணபதியின் அன்பு மகனும் இராசம்மா (ராணிரீச்சர்) வின் அன்புக் கணவரும் கௌரிசிவம் (லண்டன்), சித்திரலேகா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சித்திரலேகா,*
*ரெம்பிள் வியூ,*
*நவாலி தெற்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
**மனைவி, மகள்.**
(39713) (11-12-33)

### *பொன்னையா தம்பிப்பிள்ளை*



சாம்பல்தீவு, திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் இத்தாவில், பளையை வசிப்பிடமாகவும் துன்னாலை மேற்கு, கரவெட்டியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா தம்பிப்பிள்ளை அவர்கள் 05.09.2005 அன்று காலமானார். அன்னார் சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, செல்வநாயகி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், குலேந்திரதாஸ் (திருகோணமலை), புவனேஸ்வரி, ரமேஸ்வரன் ஆகியோரது அன்புத் தந்தையும் நல்லையா, பத்மநாதன், தனபாலசிங்கம் (சின்னண்ணை), கணேஸ்வரி, அனுசியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2005) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரது தற்காலிக வசிப்பிடமான துன்னாலை மேற்கு, கரவெட்டியில் அமைந்துள்ள வீட்டில் நடைபெறவுள்ளது. அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவெட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
(சி-44909) (11-12-33)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலைப்பீட, இராமநாதன் நுண்கலைக்கழக பரீட்சைகள்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பின்வரும் நேர அட்டவணையைக் கவனித்து பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**இராமநாதன் நுண்கலைக்கழகம்**

3ஆம் வருட முதலாம் அரையாண்டு - 12.09.2005 - 19.09.2005
3ஆம் வருட ஆண்டிறுதிப் பரீட்சை - 14.09.2005
(பழைய பாடத்திட்டம் Degree & Diploma)
4ஆம் வருட முதலாம் அரையாண்டு - 21.09.2005இலிருந்து ஆரம்பமாகும்.

**கலைப்பீடம்**

4ஆம் வருட முதலாம் அரையாண்டு - 20.09.2005 - 26.09.2005

கலைப்பீட, இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான முதலாம் வருட, இரண்டாம் வருட, மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுக்கான ஆங்கிலப் பரீட்சைகள் (ESL for Convocation Batch) 09.09.2005 அன்று நடைபெறும். இதற்குரிய பரீட்சை அட்டவணையையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 08.09.2005இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (சி-44912) (11-12-33)

---

**ராஜா** யாழ்ப்பாணம்

சுரேஸ்கோபி நடித்த

**பத்ரம்**

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)

(சி-43380)

---

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ் நடித்த

**அந்நியன்** (டிஜிட்டல் ஒலியமைப்பு)

காட்சிகள்:
11.00, 3.00, 7.00 (பு.நே.).

---

## சாரதி தேவை (DRIVER)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்ய விற்பனை நிலையத்திற்கு பொருள்களைக் கொண்டுசென்று விநியோகிக்கக் கூடிய சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள சாரதி உடன் தேவை. (10 வருட அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) நேரில் வரவும்.

**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2567
(சி-44907) (11-12-33)

---

## தவறிவிட்டது

முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸிலிருந்து ஒருதொகை நகைகள் (பச்சை நிறப் பணப் பையுடன்) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:
**திருமதி லீலா கிருபாகரன்**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
0777 238514
(39711)

---

## D.C.C.A C.A.Q. 06 - 07

யாழ்.பேராதனை வெளிவாரி விரிவுரை ஆரம்பம் 10.09.2005 சனி காலை 8.30 B.A. FINAL (யாழ்) வினாவிடை வகுப்பு B.A. PART - 1 ஆங்கிலம் ஆரம்பமாகின்றன. முற்பணம் அறிவிடப்படமாட்டாது. பதிவுகள் யாவும் எம்மால் செய்துதரப்படும். மேலதிக விவரங்களுக்கு இயக்குநர்.

**D.C.C.A** மக்கள் வங்கி அருகில், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

---

சக்தி TV **சக்தி T.V, சக்தி F.M. இன்** சக்தி FM

## 7 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்தினை முன்னிட்டு

யாழ்.மாவட்டத்திற்கான மாபெரும்

## சைக்கிள் ஓட்டப்போட்டி 10-09-2005



*குறிப்பு:* போட்டியாளர்களுக்கான விதிமுறைகளுக்கும் ஓட்டப்பாதை விவரங்களுக்கும் மற்றும் மேலதிக விவரங்களுக்குமான முக்கியமான கலந்துரையாடல்

**நாளை (08-09-2005) வியாழக்கிழமை பிற்பகல் 5 மணி வீரசிங்கம் மண்டபத்தில்**

நடைபெறவுள்ளதால் அனைத்துப் போட்டியாளர்களையும் இக் கலந்துரையாடலில் பங்குபற்றும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**போட்டிக்கான பாதை**

ஆரம்பம்
துரையப்பா விளையாட்டரங்கு → (கண்டி வீதியூடாக) → கொடிகாமம் → (வரணி வீதியூடாக) → கலிகைச் சந்தி → நெல்லியடி → (பருத்தித்துறை வீதியூடாக) → வல்லைச் சந்தி → அச்சுவேலி → நிலாவரை → (புன்னாலைக்கட்டுவன் வீதியூடாக) → சுன்னாகம் → (மருதனார்மடம் வீதியூடாக) → கொக்குவில் → (கே.கே.எஸ். வீதியூடாக) → துரையப்பா விளையாட்டரங்கு
முடிவிடம்

---

**N.E.I**
இராஜ வீதி, நல்லூர்.

**O/L PAPER CLASS**

ஆரம்பம்
10.09.2005
சனி 8.30 A.M.
வெளி மாணவரும் பயன் பெறலாம்.

---

## கணனி கற்கைநெறியில் சர்வதேச அங்கீகாரம்

The Leading INDIAN IT College

FREE BOOKS FOR ALL STUDENTS

**GLOBAL VILLAGE COMPUTER EDUCATION**
(A Unit of Global Media Tech - India)

புதிய பிரிவுகள் ஆரம்பம்!!

*PROFESSIONAL TRAINING COURSES*

DIPLOMA IN OFFICE AUTOMATION
DIPLOMA IN COMPUTE APPLICATION
DIPLOMA IN WEB DESIGNING
DIPLOMA IN ENGINEERING DRAWING
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN MULTIMEDIA
DIPLOMA IN E-COMMERCE
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
GLOBAL KIDS PROGRAMMING (STAGE 1&2)
COMPUTERIZED ACCOUNTING



வார, வார இறுதி, மாலை
இரவு நேர வகுப்புக்கள்!
பிரத்தியேக, குழு வகுப்புக்கள்!!

IMIS UK — Tally — eTouch COMPUTER SYSTEM

UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA, SRI LANKA
Phone: 021 4590222 E-Mail: etouch@wow.lk Web: globalvillage-lanka.com

# கொடிகாமத்தில் கோஷ்டி மோதல் நால்வர் காயம்: நகரில் பதற்றம்!

யாழ்ப்பாணம்,செப்.7

கொடிகாமம் சந்திப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்வத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கோஷ்டி மோதலில் சிக்கி மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

தென்மராட்சியில் போக்கட்டி மற்றும் குடமியன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு வேறு குழுக்களுக்கிடையே நிலவிவந்த பகைமையுணர்வே நேற்றைய இச்சம்பவங்களுக்குப் பின்னணி எனக் கூறப்பட்டது.

இந்தச் சம்பங்களையடுத்து ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக கொடிகாமம் நகரப் பகுதியில் வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன. அப்பகுதியில் ஏ-9 பாதையூடான போக்குவரத்துக்களிலும் தடங்கல்கள் ஏற்பட்டன.

அப்பகுதி சன நடமாட்டம் குறைந்து காணப்பட்டது. எங்கும் பதற்றம் நிலவியது.

குடமியனைச் சேர்ந்த ரி.பார்த்தீபன் (வயது-22) என்ற இளைஞரே வாள்வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

போக்கட்டிப் பகுதியைச் சேர்ந்த கா. கமலநாதன் (வயது-42), க.வசந்தகுமார் (வயது-18), க.ஜெயதீபன் (வயது-19) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த நால்வரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். (3-9)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் 2 மணியளவில் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இந்தத் தேடுதலை நடத்தினர் என்றும் -

சோதனை செய்த இராணுவத்தினர் அலுவலகத்தில் இருந்த ஆவணங்களை எடுத்துச் சென்றனர் என்றும் - விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சோதனையை முடித்துத் திரும்பிய படையினர் அலுவலகத்துக்கு அருகில் வசித்துவந்த எஸ்.வல்லிபுரம் (வயது 55) என்பவரைக் கைதுசெய்து அழைத்துச் சென்றுள்ளனர்.(3)

## நாவிதன்வெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து செயற்படும் துணைக்குழுக்களும் இந்தாக்குதலை மேற்கொண்டுள்ளன என்றும் - தாக்குதலின் போது அலுவலகத்துக்குள் புகுந்து அங்கிருந்த ஆவணங்களை அபகரித்துச் சென்றனர் என்றும் - விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (3)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்தப் பகுதியூடான போக்குவரத்துக்கள் அனைத்தும் படையினரால் தடைசெய்யப்பட்டன.

இதேவேளை, அபயபுரச் சந்தியிலும் கிரனேட் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (க-3)

## சுடர் ஒளி மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணைகளைத் துரிதப்படுத்தி சந்தேகநபர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டதுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி விசாரணைகளின் முன்னேற்றம் பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் கிராண்ட்பாஸ் பொலீஸாரைப் பணித்தார். (க-3)


IBMS

NEW BATCHES START ON

Batch I : 10.09.2005 } at 10.00 A.M
Batch II : 14.09.2005

| Course | Fees |
|---|---|
| MS Word | 500.00 |
| MS Excel | 500.00 |
| MS Access | 500.00 |

| DIPLOMA COURSES |
|---|
| Dip. in Microsoft Office |
| Dip. in Desk Top Publishing |
| Dip. in Internet Technology |
| Dip. in Hardware Engineering |

| | |
|---|---|
| Head Office : | # 410, K.K.S. Road, Jaffna. T.P. No.: 021 222 8232 |
| Branches : | NMMV Road, Nelliady. Sangaththanai, Chavakachcheri. |


## வாகரையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரே தாக்குதலில் உயிரிழந்தவர்களாவர் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

உயிரிழந்த போராளிகளின் உடல்கள் சம்பூரில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பணிமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

கனரக ஆயுதங்கள் தாங்கிய இலங்கை இராணுவக் குழு ஒன்றினாலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். தாக்குதலை நடத்தியவர்கள், கட்டுமுறிவில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரம் மேற்கேயுள்ள சிங்கபுர இராணுவ முகாம் நோக்கியே சென்றுள்ளனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தமக்கு எதிரான நிழல் யுத்தம் ஒன்றுக்காக இலங்கை இராணுவத்தினர் கருணா குழுவினரை துணைப் படையினராக கூலிக்குப் பயன்படுத்துகின்றனர் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர். பொலன்னறுவை - மட்டக்களப்பு எல்லைப் பகுதியில் பின்தங்கிய கிராமங்களில் இருந்து அவர்கள் செயற்பட்டு வருகின்றனர் என்றும் புலிகள் கூறுகின்றனர். (க-3-ரி)

## ஹெல உறுமயவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் 13ஆம் திகதி கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்னாள் ஹெல உறுமய நடத்தும் கூட்டத்திலேயே அறிவிப்பதென்றும் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னர் ஜாதிக ஹெல உறுமயவிற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களுக்கும் இடையே பேச்சுகள் நடைபெற்றன. அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேம் ஜயந்த ஹெல உறுமயவின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வண. அத்துரலியே ரத்ன தேரர்,வண. ஓமல்பே சோபிததேரர் மற்றும் கட்சி முக்கியஸ்தர்களான உதய கம்மன்பில, கொட்டகதெனிய, சம்பிக்க ரணவக்க ஆகியோர் இந்தப் பேச்சில் கலந்துகொண்டனர்.

பிரதமருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டமை குறித்து நேற்றுமாலை 'உதயனு'க்குக் கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஓமல்பே சோபித தேரர், தமது கட்சியின் நிபந்தனைகளை மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுள்ளார் என்பதாலேயே தமது கட்சி தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது என்று கூறினார்.

எதிர்வரும் 13ஆம் திகதி கண்டி தலதா மாளிகை முன்பாக ஒன்றுகூடி தமது கொள்கைகள் - பிரதமர்- ஏற்றுக்கொண்ட நிபந்தனைகள் - தொடர்பாகத் தாம் உறுதிபூணவுள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

கடந்த சனிக்கிழமை விகாரமாதேவி பூங்காவில் ஹெல உறுமய கட்சி நடத்திய மாநாட்டில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சி தனித்துப் போட்டியிடும் என்று பகிரங்கமாக அறிவித்தது. வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும்போது வேட்பாளர் விவரம் தெரிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

இந்த அறிவிப்பு வெளியாகி மூன்று நாள்கள் கடப்பதற்கிடையில் பிரதமருக்கு ஆதரவு தெரிவித்து அவருடன் ஒப்பந்தம் ஒன்றையும் செய்துகொண்டுள்ளது அக்கட்சி. (க-3)

# சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் இல்லை

## இலங்கை விஜயத்தில் உணர்ந்தேன் என்கிறார் ஐ. நா. பிரதிநிதி

கொழும்பு,செப்.7

சமாதான முயற்சிகளில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்பதை இங்கு மேற்கொண்ட விஜயத்தின்போது உணர்ந்து கொண்டேன் என்று ஐ.நா.பொதுச் செயலாளரின் பிரதிநிதி பிரேஹ்மி கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக் குழுவுடன் நேற்று மாலை நடத்திய சந்திப்பின் போதே அவர் இப்படிக் கூறினார்.

கடந்த காலத்தில் சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுக்குக் கொடுமைகள் மற்றும் கடந்த மூன்றரை வருடங்களின் சமாதானச் சூழலில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவது தொடர்பாக கூட்டமைப்புக்குழு விவரமாக எடுத்துக் கூறியது.

சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வேயை வெளியேற்றும் நோக்கத்துடன் இலங்கைக்கு வரவில்லை என்றும்.

லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையின் பின் சமாதான முயற்சிகளின் நிலை குறித்து ஐ. நா.செயலருக்கு அறிக்கை சமர்பிக்கும் வகையில் விவரங்களைப் பெறும்நோக்குடன் வந்துள்ளேன் என்றும் - அவர் கருத்து வெளியிட்டார் என கூட்டமைப்பினர் தெரிவித்தனர். (3)

## போராளி வீரச்சாவு

மட்டக்களப்பு,செப்.7

மட்டக்களப்பு, 32 ஆம் கட்டை, பிள்ளையார் கோயிலடி எனும் இடத்தில் - கடந்த 30 ஆம் திகதி இனந்தெரியாத தேசவிரோதக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு ஏரிக்கரை வீதியைச் சேர்ந்த கப்டன் ரீகன் அல்லது பரமகுணம் (குமாரசாமி மோகனதாஸ்) எனும் போராளியே வீரச்சாவடைந்தார் எனப் புலிகள் அறிவித்தனர். (3-ரி)

## அரச கட்டுப்பாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான பேச்சுக்கள் இப்போதைக்கு நடைபெறும் சாத்தியங்களும் தென்படாத நிலையில் போராளிகள்மீது தொடரும் தாக்குதல்கள் புலிகளைச் சீற்றமுறவைத்துள்ளது. பேச்சுக்களை நடத்தும் இடத்தைத் தெரிவு செய்வதில் காணப்படும் இழுபறி நிலை, தெற்கில் ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகள் சூடு பிடித்திருப்பது போன்ற காரணங்களால் அரசு-புலிகள் பேச்சுக்கள் உடனடியாக நடைபெறுவதற்கான சாத்தியங்கள் எவையும் தென்படவில்லை.

இந்த நிலையில் போராளிகள் மீதான தாக்குதல்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேலும் மோசமான நிலைமைக்குள் தள்ளி வருகின்றன. கிழக்கில் தொடரும் இத்தகைய தாக்குதல்களை அரசு தடுத்து நிறுத்தாத வரை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமது அரசியல் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வதெனப் புலிகள் தீர்மானித்திருக்கின்றனர் என்று தெரிகின்றது. (க-3)

## கிண்ணியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் மாலை வானொன்றில் வந்த நபர்கள் இந்த இரு இளைஞர்களையும் கடத்திச்சென்றனர் எனப் பொலீஸார் கூறுகின்றனர்.

பின்னர் ராகமை, குருகுலாவ தளபிட்டிய பிரதான வீதி ஓரத்திலிருந்து குறித்த இரு இளைஞர்களது சடலங்களும் நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டன.

இவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனரா அல்லது அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளனரா? என்பது பற்றி விசாரணைகள் முடிவுறும்வரை எதுவும் கூறமுடியாது என ராகமைப் பொலீஸார் தெரிவித்தனர். (க-3)


புதிய புலிவேசல் அக்கடமி

A/L Day Class

TAM. குழந்தை
ECO. உதயன்
LOG. கமல்
ACC. சயந்தன்
H.cu ஜெயக்குமார்
Geo. பாபு
B.st. யசோ

ஆரம்பம் 09.09.2005 வெள்ளி 7a.m.


# தமிழ் இளைஞன் கொழும்பில் கைது!

கொழும்பு, செப்.7

கொழும்பு, மோதர பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் கைத்துப்பாக்கியுடன் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினமிரவு மோதர, கிம்புலஎல பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞர் ஒருவரை, அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட பொலீஸ் குழுவினர் சோதனைக்கு உட்படுத்தினர். அவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட நவீன கைத்துப்பாக்கியொன்றை அவர்கள் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்டவர் பாதாள உலக நபரா? அல்லது புலி உறுப்பினரா? என்பது பற்றித் தாம் விசாரணை நடத்தி வருகின்றனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.(க-3)

## கைதடியில் சிசு மீட்பு

யாழ்ப்பாணம்,செப்.7

கைதடி, பூதவராயர் கோயிலடிப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவித்து சுமார் 30 நாள் மதிக்கத்தக்க ஆண் சிசுவொன்றை சாவகச்சேரிப் பொலீஸார் நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர்.

மேற்படி குழந்தை நலமுடன் இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (9-78)

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தைக் காண்பதற்காக தாம் யாழ்ப்பாணம் சென்று திரும்பினர் என்று, கைது செய்யப்பட்டுள்ள இராணுவக் கப்டன் விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார். அவரைப் பொலீஸாரும் இராணுவப் பொலீஸாரும் விசாரணை செய்து வருகின்றனர்.

அவருடன் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கண்டியைச் சேர்ந்த சிங்களப் பெண் என்று பொலீஸார் தெரிவித்தனர். ஏனைய இருவரும் தமிழர்கள்.

போர்நிறுத்த விதிகளின்படி யுத்தத்தில் தொடர்புபட்ட ஒரு தரப்புக்கு அறிவிக்காமல் அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதிகள் ஊடாக மற்றைய தரப்பைச் சேர்ந்தவர்கள் பயணம் செய்ய முடியாது. குறித்த இராணுவக் கப்டன் புலிகளுக்கு எந்தவித முன்னறிவித்தலும் கொடுக்காமல், சாதாரண பிரஜை போன்று ஏ-9 வீதியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியூடாகப் பயணம் மேற்கொண்டுள்ளார். (க-3)

## மரண அறிவித்தல்

### போதகர் தம்பையா பாலசுப்பிரமணியம் (பவுல்)

போதகர் தம்பையா பாலசுப்பிரமணியம் (பவுல்) வல்வெட்டித்துறை, நாற்சதுர சுவிஷேச சபையின் போதகர் தம்பையா பாலசுப்பிரமணியம் நேற்று (06.09.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


கூழாவடி,
பருத்தித்துறை.

(39715) (25-11-45)

தகவல்:
பாமா (மனைவி).


EXPOAiR
your friend in the skies...

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.